விலை சதம் 5

பக்கங்கள் 4

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்:
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஆ ஐப்பசி மீ 5உ புதன்கிழமை — Colombo, October, 22, 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 7 | இதழ் 141

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாருக்கு காந்திஜி எச்சரிக்கை

கடவுளுக்கு சம்மதமாக நடக்க விரும்பாதவர் வெளியேறுக!

தென்னாப்பிரிக்க சர்க்கார் தகிடுதத்தம்

ஐக்கிய தேச சபைக்கு இந்திய சர்க்கார் அறிக்கை

காஷ்மீர் எல்லையில் பரபரப்பு

புதுடில்லி, அக். 20

இந்தியாவைவிட்டு வெளியேறாது இந்தியாவில் இன்னும் தங்கியிருக்கும் பிரிட்டிஷார்களையெல்லாம் கொல்ல வேண்டுமென்று ஒரு ரகசிய வதந்தி நிலவி வருவதாகக் குறிப்பிட்டு தன் பெயரைத் தெரிவிக்காமல் "பிரிட்டிஷார்" என்ற கையொப்பமிட்டு மகாத்மா காந்திக்கு ஒரு கடிதம் கிடைத்தது. இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்தில் மகாத்மா காந்தி இந்த "பிரிட்டிஷாரின்" கடிதத்தைக் குறிப்பிட்டு பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியாவில் இந்திய சர்க்காருக்கு விசுவாசமாகவும் இந்தியாவுக்கு சேவை செய்ய வேண்டுமென்ற நல்லெண்ணத்துடனும் இந்தியாவில் வசிக்க விரும்புகிற ஒவ்வொரு பிரிட்டிஷாரையும் அவர்களுக்கு யாதொரு விதமான கெடுதலோ அவமானமோ ஏற்படாதவாறு பாதுகாப்பது நமது கடமையாகும். கடிதத்தை எழுதியிருப்பவர் வதந்தியைப்பற்றியே குறிப்பிடுகிறார். இதைக் கேட்டு அவர் அஞ்சத் தேவையில்லை. அப்படியஞ்சுவதற்குக் காரணமுமில்லை. கலகத்தால் துண்டிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரிட்டிஷாருக்குப் பாதுகாப்பு இல்லையென்று அவர் கூறுவதை நான் ஒப்புக்கொள்கிறேன். பாதுகாப்பை விரும்பும் எவரும் அது ஏற்படக் கூடியவாறு நடந்து கொள்ள வேண்டும். அதாவது கடவுளிடம் உண்மையான நம்பிக்கை வைத்து கடவுளுக்குகந்தபடி நடக்க வேண்டும் இரண்டாவதாக தனது அக்கம் பக்கத்தார் நன்னம்பிக்கையையும், நல்லுறவையும் பெறவேண்டும். இப்படிச் செய்தால் பாதுகாப்பு தானாகவே ஏற்படும். இந்த இரண்டு தன்மைகளும் இல்லாத பிரிட்டிஷார் உயிருக்குபயந்து கொண்டு இந்தியாவிலிருப்பதைவிட தங்களை வரவேற்க விரும்பாத இந்தியாவிலிருந்து வெளியேறிப் போய் விடுவதே நல்லது. நிலைமை அவ்வளவு தூரத்திற்கு வந்து விட்டது.

தென்னாப்பிரிக்க இந்தியர் பிரச்னை

புதுடில்லி, அக். 21

தென்னாப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களை தென்னாப்பிரிக்க சர்க்கார் நடத்திவரும் போக்கு பற்றி 1946-வது வருடம் டிசம்பர் 8-ம் தேதியன்று ஐக்கிய தேச அசெம்பிளி நிறைவேற்றிய தீர்மானத்தின் மீது இந்திய சர்க்கார் தங்கள் அறிக்கையை இன்று நியூயார்க்கிலுள்ள ஐக்கிய தேச ஸ்தாபனத்தில் சமர்ப்பித்துள்ளார்கள். இந்த அறிக்கையில் இந்திய சர்க்கார் பின்வருமாறு தெரிவித்திருக்கின்றனர்:-

ஐக்கிய தேச அசெம்பிளியின் தீர்மானத்தை தென்னாப்பிரிக்க சர்க்கார் அறவே புறக்கணித்து விட்டார்கள் என்று இந்திய சர்க்கார் கருதுகிறார்கள். அத்தீர்மானத்தின் பிரகாரம் தென்னாப்பிரிக்க சர்க்கார் நடந்து கொள்ளும்படி செய்ய ஐக்கிய தேச ஸ்தாபனம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அத் தீர்மானத்தின் நிபந்தனையை அடிப்படையாகக்கொண்டு இந்திய சர்க்காருடன் சமரசப் பேச்சு நடத்த தென்னாப்பிரிக்க சர்க்கார் மறுத்துவிட்டார்கள். இந்தியர்களுக்கும் மற்ற ஆசிய வாசிகளுக்கும் விரோதமாகவுள்ள துவேஷமான சட்டங்களையும் நடவடிக்கைகளையும் கைவிடுவதற்கும் அவர்களுக்கு சம்மதமில்லை. ஐக்கியதேச ஸ்தாபனம் பாரபட்சமான தீர்ப்பு செய்ததாக ஜெனரல் ஸ்மட்ஸ உட்பட தென்னாப்பிரிக்க சர்க்கார் பிரதிநிதிகள் யாவரும் பகிரங்கமாகப் பேசி வந்திருக்கிறார்கள். ஸ்தாபனத்தின் அமைப்பைக் கண்டித்தும் அதைக் கேவலப்படுத்தியும் பேசியிருக்கிறார்கள். இவ் விஷயங்களையெல்லாம் ஐக்கிய தேச ஸ்தாபனம் கவனித்து, அசெம்பிளி தீர்மானத்தின்படி தென்னாப்பிரிக்க சர்க்கார் நடந்து கொள்ளும்படி செய்ய ஐக்கிய தேச ஸ்தாபனம் சரியான நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கலந்து ஆலோசனை செய்ய இந்திய சர்க்காரின் ஹை கமிஷனர் தென்னாப்பிரிக்காவுக்குத் திரும்பி வர வேண்டுமென்று தென்னாப்பிரிக்க சர்க்கார் விரும்புகிறார்கள். இரு சர்க்கார்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு சமரச மகாநாடு நடத்த இந்திய சர்க்கார் விரும்புகின்றனர். ஆனால் அசெம்பிளி தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு சமரசப்பேச்சு நடத்த தென்னாப்பிரிக்க சர்க்கார் ஒப்புக்கொண்டால், ஹை கமிஷனரை தென்னாப்பிரிக்காவுக்கு அனுப்பி வைப்பதில் இந்திய சர்ககாருக்கு ஆட்சேபனை கிடையாது. அப்படிச் செய்ய தென்னாப்பிரிக்க சர்க்கார் இணங்கவில்லை. தென்னாப்பிரிக்காவிலுள்ள ஐரோப்பியர்கள் இந்தியர்களுக்கு விரோதமாக ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஐரோப்பியர்கள் இந்திய வர்த்தகர்களைப் பகிஷ்கரிக்கிறார்கள். ஐரோப்

(4-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டன் இலங்கைக்கு கடனாளி

68 கோடி ரூபாய் வரவேண்டும்

நிதி மந்திரியின் சீமைப் பயணம்

கொழும்பு, அக். 21

இங்கிலாந்திடம் இருந்து இலங்கைக்கு வரும தியான ஸடெர்லிங் பாக்கி 21 கோடி டாலராகும். அதாவது இலங்கை நாணயப் பிரகாரம் மொத்தம் 68 கோடி ரூபாய்களாகும்.

இதைத் திரும்பிக் கொடுக்காமலே தட்டிக் கழித்துவிட பிரிட்டன் பார்க்கிறது. சில சமயம் முழுத் தொகையில் ஒரு பகுதியை மட்டும் கொடுக்க, அல்லாவிட்டால் விற்பனையாகாத தனது பொருட்களை இலங்கை தலையில் கட்டிவிட பிரிட்டன் முயற்சிசெய்யலாம்.

இந்த ஸ்டெர்லிங் கடனைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நிதி மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா டிஸம்பரிலோ அதற்கு முன்னரோ இங்கிலாந்து செல்வார் என தெரிகிறது. அவருடன் உள்நாட்டு மந்திரி ஸர். ஒலிவர் குணதிலக்காவும் சில பொக்கிஷ இலாகா மேலதிகாரிகளும் செல்வார்கள் என நம்பப்படுகிறது.

கள்ள மார்க்கெட்டுகளில் ஏராளமான சீனி

கொழும்பு, அக். 22

கொழும்பு நகரிலே இப்பொழுது ஏராளமான சீனி கள்ள மார்க்கெட்டுகளில் விற்பனையாவதாகவும் உணவுப் பொருள் சப்ளை இலாகா அதிகாரிகள் மேற்பார்வை திருப்திகரமாக இல்லாமையே இதற்குக் காரணமென்றும் தினசரி 25 முதல் 50 டன் சீனிகள்ளமார்க்கெட்டுகளில் விற்பனை யாவதாகவும் கூறப்படுகிறது. கள்ள மார்க்கெட்டில் சீனிருத்தல் 80 சதம் முதல் ரூ. 1.00 வரை விலையாகிறது. சீனி வர்த்தகத்தைச்சர்க்கார் வைத்திருப்பதை வர்த்தகர்கள் கண்டிக்கின்றனர். கள்ள மார்க்கட்டுக்குச் செல்லும் சீனியைசரியானவழியில் உபயோகித்தால் சீனி தட்டுப்பாடு நீங்குமென்று வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

தமிழர் மானத்தை காத்து தமிழர் பலத்தை காட்டுவது தமிழ்க் காங்கிரஸ்

உரிமையை நிலைநாட்டுவதேயன்றி உத்தியோக வேட்டையாடுவது அதன் லட்சியமல்ல

தமிழர் ஆண்ட நாட்டிலே தமிழர் பதவிக்கு பிச்சை ஏற்பதழகாமோ?

தேர்தலில் தமிழரின் ஜெயக்கொடி நாட்டிய திரிகோணமலையில் தமிழ்த் தலைவர்கள் முழக்கம்

பிரதிநிதி திரு. சிவபாலனுக்கு வரவேற்பு

திரிகோணமலை, அக். 19

திரிகோணமலைப் பிரதிநிதி திரு. சிவபாலன் அவர்கட்கு இன்று மாலை ஐந்தரை மணிக்கு ஹிந்துக் கல்லூரியில் ஒரு வரவேற்பு உபசாரம் நடந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இதில் பங்குபற்றியிருந்தார்கள். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம், திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம், டாக்டர் ஈ எம். வீ. நாகநாதன் முதலியோர் விஜயம் செய்திருந்தார்கள் மேற்படி கூட்டம் நகரசபை தலைவர் திரு. மாணிக்கராஜா தலைமையில் நடைபெற்றது.

திரு. மாணிக்கராஜா பேசியதாவது:- இலங்கையிலே இரண்டாவது பட்டினம் திரிகோணமலை. இங்கேதான் தமிழ்க் காங்கிரஸ் முதலாவது வெற்றி பெற்றது. இதை தமிழில் புண்ணிய பூமியென்று சொல்வார்கள். அப்புண்ணிய பூமிக்கே தமிழ்க் காங்கிரஸ பிரதிநிதிகள் முதல் விஜயம் செய்திருக்கிறார்கள். இன்று தமிழன் என்றமார் தட்டி முன்னிற்கச் செய்தவர்களும் அவர்களே. ஆதலால் நாங்கள் எங்கள் பூரண ஆதரவை அவர்கட்கு வெளிப்படையாகக் காட்டி எங்கள் உரிமைக்காகப் போராடுவோம்.

திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் சொன்னதாவது:- "கீழ் மாகாணத்தினரின் ஒற்றுமையைக்காட்டுவதில் முதற்படியில் நின்றது திரிகோணமலையே. ஆனால் பட்டம் பதவிக்காக எங்களுரிமையை விற்கமாட்டோம் என்று இறுதி வரை திரிகோணமலையிலுள்ளவர்களும் எங்கள் பிரதிநிதியும் நின்றது உண்மையான ஒற்றுமையைக் காட்டுகிறது. இன்றுள்ள கட்சிகளை இரண்டாகப் பிரிக்கலாம்; அவை யூ. என். பி. இடதுசாரிக்கட்சி என இரு பிரிவினதாகும். இருகட்சிகளையும் ஒப்பு நோக்கின் இடதுசாரிக் கட்சியில் போதிய திறமைவாய்ந்த அரசியல் ஞானிகளும், அறிவாளிகளுமிருப்பதை நாம் வெகு இலகுவாய்க் கண்டு பிடித்து விடலாம். இப்படியான திறமைசாலிகட்கு சேனநாயக்காவின் அரசாட்சியில் இடம் கிடையாமல் விட்டது பிரதம மந்திரியின் பொருந்தாத வேலையாகும்.

திரு செல்வநாயகம் கூறியதாவது:- இங்கே நீங்கள் கூடியிருக்கும் காட்சியானது என் மனதை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தி விட்டது. இலங்கையைப் பேசும் மொழியின்படி இரண்டாகப் பிரிக்கலாம். அவை ஒன்று தமிழ் வழங்கும் நாடு; மற்றது சிங்களம் வழங்கும் நாடு. இதைவிட இலங்கையை பொதுவாக தமிழ் மன்னர்களாண்டார்களேயாயினும் கீழ் மாகாணமும் வட மாகாணமும் சிறப்பாகத் தமிழ் மன்னர்களால் ஆளப்பட்டு வந்ததென்பதை யாவரும் சரித்திர வாயிலாக அறியலாம். அப்படி இலங்கையை இரண்டு இடங்களிலுமிருந்து அரசாண்டு வந்த நாம எங்கள் உரிமையை விட்டு மற்றவரிடம் நியாயமற்ற முறையில் அவர்கள் மனம் பார்த்துத் தருவதை வாங்குவது முறையா? அழகா? அல்லது அது உங்களுக்கு மரியாதையா? தமிழ்க் காங்கிரஸ பிரதிநிதிகளாகிய நாங்கள் மற்றவர்களைப்போல் உங்களை மயக்கவோ, ஏமாற்றவோ அல்லது உங்கள் மானத்தை விற்கவோ அல்லது உங்கள் உரிமையை அடிமைச்சாதனமெழுதிக்கொடுக்கவோ ஆயத்தமாய் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. அப்படி உங்களை ஏமாற்றுபவர்களாயிருந்தால் உங்கள் காலடிக்குச் சிறப்பாக திரிகோணமலை வாசிகளின் காலடிக்கு முதன்முதல் வந்திருக்கமாட்டோம். நீங்களே எங்களை அனுப்பினீர்கள். உங்கள் வாக்குரிமையே எங்கள் எழுவரையும் பாராளுமன்றத்துட் பிரவேசிக்கச் செய்தது. அதை உணர்ந்தே நாங்கள் இன்று உங்களிடம் எங்கள் திட்டங்களை உங்களுடன் கலந்தாலோசிக்கவந்துள்ளோம் நீங்கள் இடும் கட்டளையைத் தான் செய்யப்போகிறோம். உங்கள் விருப்பத்தின்படியே நடப்போம். நீங்களும் தமிழர்கள்; நாங்களும் தமிழர்களதான், ஆனதால்தான் இறுதிவரை தமிழர்களாகி உங்களுக்கு மாறாக நாம் நடக்கவுமில்லை; நடக்கப்போவதுமில்லை. அப்படி நடக்க எண்ணவுமில்லை. அப்படித் தமிழருக்கு மாறாய் நடப்பது சுத்தத் தமிழ் மக்களின் கடமையல்ல இப்போது நீங்கள் ஏன் தமிழ்க் காங்கிரஸ மந்திரி சபையில் சேரவில்லையென்று கேட்கலாம். அதற்குரிய பதிலை உங்களிடமே நான் திருப்பிக் கேட்கிறேன். ஆளும் சாதி சிங்களவராயும் ஆளப்படும் சாதி தமிழர்களாயிருப்பது உங்கள் விருப்பமா? அல்லது மந்திரி பதவிக்கும் காரியதரிசி பதவிக்குமாக உரிமையை பறிகொடுத்து தமிழன் என்பதை மறந்து வாக்காளரையும் பொது ஜனங்களையும் ஏமாற்றிச் சேனநாயக்காவின் இனபந்துமித்திரரடங்கிய மந்திரிசபை

(4-ம் பக்கம் பார்க்க)

பிரிட்டிஷ் அதிகாரியின் கடிதம்

பர்மா மந்திரிகளைக் கொல்ல சதி

கொலை வழக்கில் பா நியூன் வாக்குமூலம்

ரங்கூன், அக் 20

பர்மா மந்திரி கொலை வழக்கு விசாரணை இன்று தொடர்ந்து நடைபெற்றது. சர்க்கார் தரப்பு சாட்சியாகத திரும்பிய எதிரி பா நியூன் மாஜிஸ்டிரேட்டிடம் கொடுத்த வாக்குமூலம் விசேஷக் கோர்ட்டு முன்பு சமர்ப்பிக்கப்பட்டது. அவ்வாக்குமூலம் 22 பக்கங்களையுடையது. வெடிமருந்து டிப்போவிலிருந்து 200 துப்பாக்கிகளையும் குண்டுகளையும் அபகரித்ததாகவும், தான் முதல் எதிரி ஊசாவின் மியோசித் கட்சியின் மாஜி லெப்டினன்ட் என்றும் தனக்கு 29 வயதாகிறதென்றும், அபகரித்த துப்பாக்கிகளையும் ஊசாவுக்கு ஒரு பிரிட்டிஷ் அதிகாரி கொடுத்த கடிதத்தையும் தான் கொண்டுவந்து கொடுத்ததாகவும், ஊசா மீண்டும் பிரதம மந்திரியான பின் அந்த பிரிட்டிஷ் அதிகாரிக்கு சன்மானம் வழங்குவதாக ஊசா தன்னிடம் கூறியதாகவும் அவ்வாக்கு மூலத்தில் பா நியூன் தெரிவித்திருந்தார். இது கோர்ட்டில் வாசிக்கப்பட்டது.

ஐந்தாவது பகுதி ஜவுளி கூப்பன்கள்

அக் 27-ம் தேதிமுதல் உபயோகிக்கலாம்

கொழும்பு, அக். 22

ஜவுளி கூப்பன்கள் 5-வது பகுதி இம்மாதம் 27-ம் தேதி முதல் செல்லுபடியாகுமென்று ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரியால் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் அடுத்த மூன்று ஜவுளிப் புள்ளிகள் (சீனியர், சூனியர் புத்தகங்களிலுள்ளவை) அடுத்த வாரத்திலிருந்து செல்லுபடியாகலாம் இப்பொழுது மார்க்கெட்டிலும் ஏராளமான ஜவுளிகள் வந்துள்ளன.

மந்திரி சபை மீது நம்பிக்கைத் தீர்மானம்

திரிகோணமலை நகரசபையில் அனுமதியில்லை

திரிகோணமலை, அக். 20

சேனநாயக்கா மந்திரி சபையில் நம்பிக்கையுண்டு என்பதாக திரிகோணமலை நகரசபைக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட ஒரு தீர்மானம் தலைவர் திரு. எஸ் எம். மாணிக்கராஜா அவர்களால் ஒவ்வாததெனநிராகரிக்கப்பட்டது.

திரு. மாணிக்கராஜா நகரசபை அங்கத்தவர்களிடையே அத் தீர்மானத்தையிட்டு ஒற்றுமையில்லாததாலும் அது நகரசபைக்குப் புறம்பேயுள்ள விஷயமாதலாலும் அதை நிராகரிப்பதாகக் கூறினார்.

கேப்டன். ஏ. சி. கனகசிங்கம் அத் தீர்மானத்தை தலைவர் நிராகரிப்பதாயிருந்தால் அப்படி நிராகரிப்பதாகவே தலைவர் சொல்ல வேண்டும் என்று சொன்னார்.

திரு மாணிக்கராஜா பதிலாகத் தாம் அன்றைய நிகழ்ச்சிக் குறிப்புகளில் அத்தீர்மானத்தைச் சேர்த்திராதிருந்ததே நிராகரித்ததற்குச் சரி என்று கூறினார்.

மழை நீடிப்பு

ஆனால் வெள்ள ஆபத்து இல்லை

கொழும்பு, அக். 22

பல இடங்களில் மழை நேற்றும் நீடித்தது. இதன் பயனாக கழனி நீர்மட்டம் நேற்று முன்தினம் 3 அடியாய் இருந்தது; மேலும் ஐந்து அங்குலம் உயர்ந்தது. ஆனால் கொழும்பு அவதான நிலைய சூப்ரன்டெண்ட் வெள்ள ஆபத்துக் கிடையாது என்றே கருதுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

பாரிஸில் புதிய பிரிட்டிஷ் ஸதானிகர்

லண்டன், அக். 20

திரு. டப் கூப்பருக்குப் பதிலாக 53 வயதுள்ள ஸர். அலியர் ஹார்வி பிரிட்டிஷ் ஸதானிகராக பாரிஸில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பழைய சரித்திரம்- புதிய ஆராய்ச்சிகள்-
தெளிவான நடை-
தெல்லியூர் எஸ். நடராஜன் எழுதிய
"தமிழன் மாட்சி"
என்னும் அரிய நூல்! வெளி வந்துவிட்டது!!
தனிப் பிரதி ரூ. 1-50.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்து இன்று சுவர்க்வாசம் செய்யும் ஈழப் புதல்வன் ஸ்ரீமத். சுவாமி விபுலானந்தர் பாராட்டி எழுதிய உரையைப்பாருங்கள்.-

"ஆர்வமுள்ள இவ்விளந்தமிழர் தமிழகத்தின் பழமையையும் செழுமையையும் குறித்து அறிஞர் கூறிய முடிபுகள் சிலவற்றைத் தொகுத்து "தமிழன் மாட்சி" என்னும் இக்கட்டுரையை வரைகின்றார். இவ்வெளியீடு தமிழ் மாணவர்க்குப் பயன்தரு நீர்மையதாகும் என்பது எனது உள்ளக் கிடக்கை."

பல்கலைக் கழகம்,
கொழும்பு. 10-2-47. விபுலானந்தர்.

கிடைக்குமிடம்:
ஸ்ரீ லங்கா புஸ்தகசாலை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

பதிப்பகம்:-
THE ELAIGNAN PUBLISHERS,
No-2, Grandpass Road,
COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, கட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஜூ ஐப்பசி மீ 5 உ
புதன்கிழமை

பாலஸ்தீனம்!

ஒக்காரியத்திலும் விகடமொன்று வேண்டுமென்பார்கள். சர்வ தேச ராஜ தந்திரத்தில் கூட இது இல்லாமல் இல்லை. பாலஸ்தீனம் இதற்கு ஓர் தக்க உதாரணமாக காட்சியளிக்கின்றது.

சென்ற சில நாட்களுக்கு முன் அராபிய நாடுகள், பாலஸ்தீனத்தில் எதிர்பாராத சம்பவங்கள் நடைபெற விருப்பதாக சங்க நாதங்கள் செய்தன. பாலஸ்தீன எல்லைப் புறங்களில் அராபிய துருப்புகள் குவிவதாகத் தொடர்ந்து செய்திகள் வெளியிடப்பட்டன. ஜெருசலேம் கிரான்ட் முப்தியின் தலைமையில் அராபிய தலைவர்கள் பாலஸ்தீனம் பிரிக்கப்படுவதை எதிர்த்துக் கூச்சலிட்டார்கள். இச்சந்தர்ப்பத்தில் கிரான்ட் முப்தி ஐக்கிய அமெரிக்காவையே கவனித்திருந்தார் என்பது வெள்ளிடைமலை - அராபியர்கள், தங்கள் மீது அநுதாபங்காட்டும் தேசங்களிடம் உதவியைக் கோருவார்கள் என்று அவர் கர்ஜனை செய்தார். அப்பொழுது ரஷியா பாலஸ்தீனப் பிரிவினையை ஆதரிப்பதாக அறிவிக்கவில்லை. பாலஸ்தீனப் பிரிவினையை எதிர்ப்பதற்கு ரஷியா உதவியை நாடலாம் என்று கிரான்ட் முப்தி எண்ணியிருந்தார்.

ஆனால் ரஷியா பாலஸ்தீனப் பிரிவினையை ஆதரிப்பதாகத் தீர்மானித்தது. கிரான்ட் முப்தியின் எண்ணத்தில் மண் விழுந்தது. நாமொன்று நினைக்க மற்றும் நாடொன்று நினைப்பது இக்காலத்தில் சகஜமாய் விட்டது. உடனே கிரான்ட் முப்தி ஒரு தகிடுதத்தஞ் செய்தார். பாலஸ்தீனத்தில் அராபிய அரசாங்கத்தை எற்படுத்துவதற்கு இது தருணமல்ல என ஒரு அறிக்கையும் வெளியிட்டார்.

கம்பக்கூத்து அத்துடன் நின்றுவிடவில்லை. மச்சான் கோவிலுக்குப் போய் கும்பிட்டால் நானும் கும்பிட்டுத்தான் தீரவேண்டும். ஐக்கிய அமெரிக்காவும் இப்பொழுது நியூயார்க்கில் குட்டிக் கரணம் போட்டாய் விட்டது என்று அறியப்படுகிறது. பாலஸ்தீன விஷயத்தில் ஐக்கிய நாடுகளின் விசேஷக் கமிட்டியார் செய்யும் தீர்ப்பை நடைமுறையில் கொண்டுவருவதற்குத் தம்மாலான ஆதரவைக் கொடுப்பதாகவே ஐக்கிய அமெரிக்கா முன்பு அறிவித்திருந்தது. அரசியல் மாற்ற இடைக்காலத்தில், பாலஸ்தீனத்தில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு ஒரு சர்வதேசியப் படையையும் ஏற்படுத்துவதாகச் சொல்லியுமிருந்தது. ஆனால் இன்று திரை மறைவில் அதே ஐக்கிய அமெரிக்கா நடுநிலைமை வகிப்பதாக "நம்பத்தகுந்த" வட்டாரச் செய்திகள் கூறுகின்றன. லத்தீன் அமெரிக்கப் பிரதிநிதிகள் பாலஸ்தீனம் திண்டாடப்படாதிருப்பதைப் பார்த்துக் கொள்ளுவார்களாம்!

ஏன் ஐக்கியஅமெரிக்காவுக்கு இந்த மனமாற்றம் ஏற்பட்டது? பாலஸ்தீன விஷயத்தில் ரஷியா நடுநிலைமை வகிக்குமென்றே ஐக்கிய அமெரிக்கா தீர்க்கமாக நம்பியிருந்தது. எண்ணியஎண்ணம்பாழாய்விட்டது. பாலஸ்தீனப் பிரிவினையை ரஷியா ஆதரிப்பதால், பாலஸ்தீனத்தில் ஏற்படுத்த விருக்கும் சர்வ தேசப் படைகளுக்கு ரஷியாவின் உதவி பெரிதும் வேண்டப்படும். ரஷியப் படைகள் பாலஸ்தீனத்தில் நிறுவப்பட்டால் மத்திய கிழக்கில் ரஷியாவுக்கு தக்க நிலமிதி கிடைத்தாய்விடும் என்பது திண்ணம்.

புரபேஷன் அதிகாரியை பயமுறுத்தினார்கள்

இருவருக்கு தலா ரூ. 25 அபராதம்

கொழும்பு, அக். 22

பிஸ்கால் இலாகா புரபேஷன் ஆபீஸர் திரு. கே. எஸ் ஈ. சைபெல் என்பவரைப் பயமுறுத்தியதாக டபிள்யூ. அலெக்ஸாண்டர், எல். அல்பர்ட் சிங்கோ ஆகிய இருவர் மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் எதிரிகள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் எதிரிகளுக்கு தலா ரூ. 25 அபராதம் விதித்ததுடன் அந்த அதிகாரியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் தீர்ப்பளித்தார்.

சேனட் சபையில் நியமனம் வேண்டும்

மன்னார் ஜில்லாக் கிராமக் கமிட்டிகள் கூட்ட தீர்மானம்

மன்னார், அக். 20

மன்னார் ஜில்லாக் கிராமக் கமிட்டிகளின் தலைவர்கள் மகாநாடு மன்னார் கிராம சங்கக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் திரு. எஸ். ஜோண் மார்க் தலைமையில் நடைபெற்றது. சேனட் சபைக்கு கவர்னர் அங்கத்தினரை நியமிக்கும்போது அகில இலங்கை கிராமச் சங்கங்கள் சபையின் இரு பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதையும் கவர்னர் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதாக ஒரு தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் தந்தி மூலம் கவர்னருக்குத் தலைவர் அனுப்பி வைத்துள்ளார்.

பத்திரிகையில் அவதூறாக எழுதியதாக வழக்கு

கொழும்பு, அக். 22

"நிதாஸ" என்னும் சிங்களப் பத்திரிகையில் திரு. சேனநாயக்காவையும், திரு டட்லி சேனநாயக்காவையும்பற்றி அவதூறாக விஷயங்களை எழுதியதாக திரு. சோமவீர சந்திரசிரி, திரு. டொன் சந்திரதாஸா கண்டேஜ் ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கெடுக்கப்பட்டது. இரு எதிரிகளுக்கும் சம்மன்ஸ் அனுப்பப்பட்டதால் கோர்ட்டுக்கு வந்திருந்தனர். விசாரணை நடத்துவதற்கு ஒரு தினத்தைக் குறைக்கும்படி வழக்கை தாக்கல் செய்த இரகசியப் போலிஸ இலாகா இன்ஸ்பெக்டர் திரு. பெதவெலா தெரிவித்தார். நீதிபதி வழக்கை 27-ம் தேதிக்கு ஒத்தி வைத்து விட்டு எதிரிகளை தலா ரூ. 5000 தயாராக வைத்திருக்கும்படியும் அப்பணம் பிணைக்குக் கொடுக்க வேண்டியிருக்குமென்றும் தெரிவித்தார்.

குளத்தில் முதலை கடித்தது

வலஸ்முல்ல, அக். 19

அலுத்வேவாவைச் சேர்ந்த ஜி. அண்டிரிஸ என்பவர் மாடுகளைக் குளத்திற்குக் குளிப்பாட்டக் கொண்டு சென்றபோது அவரை ஓர் முதலை கடித்து விட்டது. முதலையின் வாயிலிருந்து தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவர் வெகுவாகக் கஷடப்பட நேர்ந்ததாம் இப்போது அவர் வலஸ்முல்லை ஆஸபத்திரியில் குணமடைந்து வருகிறார்.

பஸ் கம்பெனி காரியதரிசிக்கு அபராதம்

கொழும்பு, அக். 22

வடமேற்கு புளூலைன் பஸ்கம்பெனி லிமிடெட்டைச் சேர்ந்த காரியதரிசி திரு ஏ. மிலனபாலனுவும் ஒரு டைரக்டரும் அக்கம்பெனியின் 1943, 1944, 1945-ம் வருடங்களின் வருடாந்தக் கணக்கு விபரங்களைச் சர்க்காருக்கு ஒப்படைக்கவில்லையென்று ஒரு வழக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் தினத்துக்கு 50 சதம் அபராத வீதம் கணக்குப் படி அபராதம் செலுத்தவேண்டுமென்று நீதிபதி கூறி அபராதத்தை திட்டமாக குறிப்பதற்காக வழக்கை ஒத்திவைத்தார்.

மலேயாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டும்

பிரிட்டன் அளிக்கும் புதிய அரசியலுக்கு பலத்த எதிர்ப்பு

நாடெங்கும் பரிபூரண ஹர்த்தால்

சிங்கப்பூர் ஸ்தம்பித்துப் போயிருந்தது

மலேயாவுக்கு இலங்கை அரசாங்கம் ஆள் திரட்டி அனுப்புவதை கொழும்பு நகர சபை கண்டிக்கிறது

சிங்கப்பூர், அக். 20

பிரிட்டிஷ் சர்க்கார் மலேயா, சிங்கப்பூருக்கு அளிக்கவிருக்கும் புதிய அரசியல் திட்டம்பற்றி இன்று மலேயா சட்ட சபையில் விவாதம் நடைபெறுகிறது. இப் புதிய அரசியல் திட்டத்தை எதிர்த்தும் மலேயாவுக்கு பூரண சுதந்திரம் வேண்டுமென்று கோரியும் இன்று நாடெங்கும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. மலேயாவிலுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றுசேர்ந்து இன்று இந்த ஹர்த்தாலை நடத்துகின்றனர்.

சிங்கப்பூர் இன்று காலை யாதொருவிதமான அலுவல்களும் நடைபெறாமல் ஸ்தம்பித்துப் போயிருந்தது. துறைமுகத்தில் கப்பல் ஏற்றுமதி இறக்குமதி வேலை செய்யாமல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். சீனர் கடைகள் இந்தியர் வியாபார ஸ்தலங்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் வியாபார ஸ்தலங்கள் மட்டும் பயத்தால் பாதி வாசல் கதவைத் திறந்து வைத்துக்கொண்டிருந்தார்கள். இதை ஒரு அமெரிக்கர் பார்த்துப் பகடிபண்ணினார். பத்திரிகைகள் எதுவும் வெளிவரவில்லை. பிரிட்டிஷார் நடத்தும் 'ஸ்ட்ரெயிட்ஸ் டைம்ஸ்' பத்திரிகை மட்டும் வெளிவந்தது. அதை வெளியே எடுத்துச் செல்லவோ விற்பனை செய்யவோ ஆட்கள் கிடைக்காமல் போலிசாரும் கப்பல் மாலுமிகளும் அவைகளை எடுத்துச் சென்று இலவசமாக விநியோகம் செய்தார்கள். ஹர்த்தால் அமைதியாக நடைபெற்றது. யாதொருவிதமான அசம்பாவித சம்பவமும் நடைபெறவில்லை.

மலேயாவுக்கு அனுப்ப இலங்கை சர்க்கார் இலங்கையர்களைத் திரட்ட எடுத்துக்கொண்ட நடவடிக்கையை கொழும்பு நகர சபை கண்டித்தது.

முன்வந்த செய்தி

சிங்கப்பூர், அக். 19

மலேயாவுக்கு வழங்கப்படும் புதிய அரசியல் சீர்திருத்தங்களுக்குப்பலமானஎர்திப்பு இங்கு இருகுகிறது. அவ்வெதிர்ப்பை வெளிக்காட்டும நோக்கமாக நாளை பொது வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலிய அம்ஸங்களைக் கொண்ட ஹர்த்தால் ஒன்று நாடெங்கும் அனுஷ்டிக்கப்படும். இதனை எதிர்பார்த்து அரசாங்கம் ஆயுதம் தாங்கிய போலிஸ, ராணுவப் படைகளை முக்கிய இடங்களில் நிறுத்தி வைக்கும் எனத் தெரிகிறது.

இந்த ஹர்த்தாலை சீன வர்த்தக சேம்பர் முதல் இடது சாரி கட்சியான கமியூனிஸட் கட்சி, தொழிற் சங்கங்கள் வரை எல்லா முக்கிய கட்சிகளும் முன்னின்று நடத்தும் என அறியப்படுகிறது.

பிரிட்டிஷ் பத்திரிகையான "ஸ்ட்ரெயிட் டைம்ஸ" நாளை வீதிகளில் விற்கப் படமாட்டா. ஏனெனில் பத்திரிகை பையன்கள் பத்திரிகை விற்றால் "காதறுக்கப்பட்டு விடும்" எனமிரட்டப்பட்டிருக்கிறார்கள்.

சிங்கப்பூர் துறைமுக அலுவல்களும் அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்படும்.

ஹர்த்தாலில் கலந்துகொள்ளும் பெருவாரி சீனர் புதிய அரசியல் திட்டத்தில் சீனர் பிரஜா உரிமை, சிங்கப்பூரை மலேய சமஷ்டியில் இருந்து விலக்கி வைத்தல் ஆகிய வற்றை ஆட்சேபிக்கின்றனர்.

கமியூனிஸ்ட்கட்சி, தொழிலாளர் சங்கங்கள் போன்ற இடது சாரியினர் பிரஜா உரிமைச் சட்டத்தில் தளர்வு, கவர்னர் அதிகாரத்தை அறவே ஒழித்து சுயஆட்சியில், தற்காப்பு அயல் நாட்டுத் தொடர்பில் பரிபூரண அதிகாரம்— ஆகியவற்றைக் கோருகிறார்கள்.

மலேயா கவர்னர் ஜெனரல் ஹர்த்தால் செய்வதை தமது ரேடியோப் பேச்சில் இன்றிரவு கண்டித்தார்.

இடது சாரியினர் சிங்கப்பூர் சட்டசபைத் தேர்தலைச் சமீபத்தில் பகிஷ்கரித்தனர். இது சம்பந்தமாக கவர்னர் தமது வருத்தத்தை அறிவித்துப் பேசுகையில் இடது சாரியினரில் "கமியூனிஸ்டுகள் ஜனநாயகத்திற்கே உதவாதவர்கள்" எனத் தெரிவித்தார். ஏனெனில் நேர்மையான சுதந்திரத் தேர்தலில் அவர்களால் பெருவாரியான வெற்றியை அடைய முடியாது.

"ஐரோப்பிய தேர்தல்களில் கமியூனிஸ்டுகள் அனுஷ்டிக்கும் அரசியல் தந்திரங்களை நாம் அறிவோம். சுதந்திரமான தேர்தல்களானால் பகிஷ்கரிப்பு, தேர்தல் யந்திரத்தைக் கட்டுப்படுத்தும் சக்தி தமக்கிருந்தால் அதிகாரத்தில் ஏற அதை உபயோகித்தல்-இதுவே அவர்கள் முறை." எனவும் கவர்னர் கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் பிரவேசித்தல்

1934 சட்டங்களை ரத்தாக்கி விட்டு அதனிடத்தில் புதிய பாஸபோர்ட் சட்டங்கள் இங்கு அக்டோபர் 10-ம் தேதி முதல் அமுலுக்கு வந்துள்ளது இதன் பிரகாரம் மலேயா ஒழிந்த மற்ற இடங்களில் இருந்து வருபவர்கள் இங்கு பிரவேசிக்க வேண்டுமானால் அவர்களிடம் கீழ்க் கண்டவைகள் இருக்க வேண்டும்:-

1. தான் பிரஜையாய் உள்ள அரசாங்கத்திடமிருந்து பெற்ற 'பாஸ போர்ட்' என்னும் பிரயாண அனுமதிச் சீட்டு.

2. சர்வதேச ஒப்பந்தத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பிரயாணத் தஸதாவேஜு.

3. சிங்கப்பூர் அந்நியர் வருகை சம்பந்தமான காரியாலயத்தால் அல்லது மலேய அந்நியர் வருகைக் கட்டுப்பாட்டதிகாரியால் விநியோகிக்கப்படும் ஓர் சர்டிபிகேட்.

மேற்கண்ட சட்டங்கள் ராணுவ வீரருக்கும், மெக்கா சென்று மீளும் முஸலிம் பக்தர்களுக்கும் கிடையாது.

கொழும்பு நகர சபை கண்டனம்

கொழும்பு, அக். 20

கொழும்பு நகர சபையின் மாதாந்தரக் கூட்டம் இதற்கு முன் இரு முறை கோரமின்றி ஒத்திவைக்கப்பட்ட பின் டெபுடி மேயர் தலைமையில் நகர மண்டபத்தில் மீண்டும் ஆரம்பமானது.

மலாயாவில் புனருத்தாரண வேலைகளுக்காக இலங்கையிலிருந்து ஆள் திரட்டப்பட்டது சம்பந்தமான இலங்கை சர்க்கார் நடவடிக்கைக்கு ஜனாப் அபூபக்கர் வருத்தம் தெரிவித்துக் கொண்டார். மலாயாவுக்கு அனுப்பப்பட்டிருக்கும் துருப்புகளை இலங்கைக்கு திரும்பக் கொண்டு வருவதற்குப் பிரதமரும் தற்போதைய மந்திரி சபையினரும் அவசிய முயற்சிகளை எடுத்துக் கொள்வார்களெனத் தாம் நம்புவதாக அவர் ஒரு பிரேரணையைப் பிரரேபித்தார்.

பிரேரணை சபையில் ஏகமனதாய் நிறைவேறியது.

மஞ்சூரிய யுத்தம்

ஷாங்கை, அக். 19

மஞ்சூரியாவில் கமியூனிஸட் துருப்புகளுக்கும் சீன சர்க்கார் துருப்புகளுக்குமிடையே எல்லா போர் முனைகளிலும் மும்முரமான யுத்தம் நடைபெறுகிறது. சர்க்கார் தலைநகரமான சாங்சுன்னை நகரை கமியூனிஸடுகள் கூடிய சீக்கிரம் தாக்குவார்கள் என்று சொல்லப்படுகிறது.

கொரியா பிரச்னையில் அமெரிக்க சூழ்ச்சி

மாஸகோ, அக். 19

கொரியா பிரச்னையை பரிசீலனை செய்யும்படி ஐக்கிய தேச ஸதாபனத்தை அமெரிக்கா கேட்டிருப்பது ஓர் சூழ்ச்சியாகும் என்று 'பிரவடா' பத்திரிகை எழுதுகிறது. அமெரிக்க ஆதிக்கமுள்ள தென் கொரியாவில் அமெரிக்க அதிகாரிகள் கொடூரச் செயல்கள்புரிவதாகக் குற்றஞ்சாட்டி யிருக்கிறது.

ஆஸ்திரேலிய கடற்படை விமானங்களுக்கு 240 லட்சம் பவுண்

சிட்னி, அக். 20

ஆஸதிரேலியக் கடற்படை மந்திரி இன்று பிரிஸ்பேன் நகரில் பேசியபோது 1952 ஜூன் 30-ம் தேதிக்குள் பலம் பொருந்திய கடற்படையை ஆஸ்திரேலியா சிருஷ்டித்து விடுமென்றும் கடற்படை விமானங்களுக்கு மட்டும் 240 லட்சம் பவுண் செலவிடப்படும் என்றும் இந்த கடல் விமானப்படையில் 4200 ஆபீஸர்களும் கடற்படையில் 14700 ஆபீஸர்களும் இருப்பார்களென்றும் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சபைகளின் கூட்டம்

மன்னர் பிரசங்கம்

லண்டன், அக். 20

இன்று பிரிட்டிஷ் பார்லிமெண்ட் இரு சபைகளின் கூட்டம் கூடியது. மன்னர் பிரசங்கம் செய்தபோது பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் மற்ற சாம் ராஜ்ய நாடுகளுக்குமிடையே பரஸபர நேசப் பான்மையான உறவு இருந்து வருமென்று நம்புகிறேன். பிரிட்டிஷ் மந்திரிகள் பாலஸ்தீனத்திலுள்ள துருப்புகளையும் திரும்பி அழைப்பதுடன் அங்குள்ள பிரிட்டிஷ் பாதுகாப்பு நிர்வாகத்தையும் கூடிய சீக்கிரம் ரத்துச் செய்வார்கள் என்று கருதுகிறேன். இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் ஏற்பட்ட கலவரத்தால் நான் மனவருத்தமடைவதுடன் அதனால் கஷ்டமுறும் மக்களுக்கும் இரு சர்க்கார்களுக்கும் நான் எனது அநுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய பிரசங்கத்தில் பார்லிமெண்ட் சபை சாசிக்க விஷயங்கள்பற்றி மன்னர் எடுத்துறைத்தார். நாளை பார்லிமெண்டின் இரண்டாவது கூட்டத்தை ஆரம்பித்து வைக்கும் போது, பார்லிமெண்ட் இனி செய்யவிருக்கும் காரியங்களைப் பற்றிப் பேசுவார். (ராய்ட்டர்)

ஒரே சூலில் நாலு குழந்தைகள்

தாயார் மரணமானார்

டெவொன் போர்ட்—, (இங்கிலாந்து), அக். 20

எட்டு நாட்களுக்கு முன்னர் ஒரே சூலில் நாலு குழந்தைகளைப் பிரசவித்த ஸ்ரீமதி நான்ஸிபிஸன் என்ற 27 வயது பிரிட்டிஷ் மாது இன்று காலமாகிவிட்டார். அவரது நாலு குழந்தைகளில் இரண்டு பெண் குழந்தைகளே ஜீவிதமிருக்கின்றன. அவை சுகமே இருப்பதாக அறியப்படுகிறது. குறிப்பிட்ட மாது ஒரு மாலுமியின் மனைவியாவார். (ராய்ட்டர்)

காலரா நோய்க்குப் பலி

இதுவரை 2637

கெய்ரோ, அக். 20

எகிப்திலே காலரா மரணம் கடந்த 24 மணித்தியாலங்களில் என்றுமில்லாத அளவு உயர்ந்து விட்டது. மொத்தம் 366 பேர் இறந்துவிட்டார்கள். நோய் ஆரம்பித்த நாள் தொடக்கம் அதாவது செப்டம்பர் 23-க்குப் பின் இதுவரை 2637 பேர் காலராவுக்குப் பலியானார்கள்.

டிரான்ஸ ஜோர்டானில் தேர்தல்கள்

அம்மான், அக். 19

சென்ற வருஷம் சுதந்திரம் அடைந்தடிரான்ஸ்ஜோர்டான் தனது முதலாவது பார்லிமெண்ட் தேர்தலை இன்றுதான் கண்டது.

18 வயதுக்கு மேற்பட்டவர்களான ஒரு லட்சம் பேருக்கு இங்கு வோட்டுரிமை உண்டு. மொத்தம் 20 தேர்தல் தொகுதிகள் என்றும், தேர்தல் முடிவு நாளை வெளியாகும் என்றும் அறியப்படுகிறது.

12 கோடி டாலர்

சர்வதேச நிதியிலிருந்து பிரிட்டன் வாங்கியது

லண்டன், அக். 20

செப்டம்பர் 15-ம் தேதியிலிருந்து இதுவரை பிரிட்டன் டாலர் வாங்குவதற்காக அமெரிக்காவுக்கு 5 கோடி பவுண் பெறுமதியான தங்கத்தை விற்றிருக்கிறது. சர்வ தேச நிதியிலிருந்து நேற்று பிரிட்டன் தங்கத்தை விற்று 12 கோடி டாலர் வாங்கியிருக்கிறது. (ராய்ட்டர்)

விகாரை லேன் கொலை வழக்கு

தேர்தல் கலவரம்

கொழும்பு, அக். 22

வெள்ளவத்தையைச் சேர்ந்த எம். பிரிஸ் பெர்னாண்டோ என்பவரைக் கொலை செய்ததாக எல். எல். பெர்னாண்டோ, டபிள்யூ. சைமன் பெர்னாண்டோ, எல். சீமன் பெர்னாண்டோ, ஈ பீட்டர் சில்வா, டி. ஹரிஸன் பெர்னாண்டோ ஆகிய தெஹிவளை வாசிகள் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்புதெற்கு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இச்சம்பவம் வெள்ளவத்தை-கல்கிசை தொகுதி தேர்தல் சம்பந்தமாக நடந்ததென்றும் விகாரை லேனிலே இச்சம்பவம் நடந்ததாகவும் கூறப்பட்டது.

கொலையுண்டவரின் மனைவியான கே ரோஸ்லின் ஹாமி சாட்சியமளித்த பின் மேற்கொண்டு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

தியேட்டருக்குள் அத்துமீறி பிரவேசம்

ஒரு மாதம் சிறை தண்டனை

அனுராதபுரம், அக். 20

அனுராதபுரம் சிற்றம்பலம் தியேட்டர் மானேஜர் திரு சிவசம்பு என்பவரை வெட்டுவதற்கு அத்தியேட்டருக்குள் அத்துமீறி வாளுடன் பிரவேசித்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஆர். சமரவீர என்பவருக்கு அனுராதபுரம் மாஜிஸ்டிரேட் ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

தாலி பறித்த வழக்கு

ஊர்காவற்றுறை, அக். 18

நாரந்தனைவாசியாகிய சின்னத்தம்பி மகள் நாகலெட்சுமி என்னும் 20 வயது இளம் பெண் அதே ஊரைச்சேர்ந்த சந்தியாபிள்ளை பெண் மரியபிள்ளை என்பவருடைய தாலிக் கொடியை பிடிங்கியதாக ஓர் வழக்கு ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது.

மாஜிஸ்டிரேட் விசாரணையை இம்மாதம் 30-ம் தேதிக்கென ஒத்திவைத்தார். [ந-நி]

இந்தோனேஷிய விவகாரம்

சிட்னியில் மூவர் கமிஷன் கூட்டம்

குடியரசு அந்நியநாட்டு மந்திரி சிங்கப்பூர் திரும்பினார்

நியூயார்க், அக். 20

யுத்த நிறுத்த உத்தரவுப்படி ஹாலந்தும் இந்தோனேஷியக் குடியரசும் நடந்துகொள்ளாததால் இப்பொழுது இந்த இரு நாடுகளும் மூவர் மத்யஸ்தக் கமிஷனைக் கலந்து அந்த உத்தரவை சரிவர அமுல் செய்யும்படி அவைகளுக்கு தெரியப்படுத்துவது குறித்து பாதுகாப்பு கவுன்ஸிலுக்கு அமெரிக்கா ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது. அசெம்பிளி நடைபெறும்போது பாதுகாப்பு, கவுன்ஸிலைக் கூட்டுவது சரியல்லவென்று ரஷியப் பிரதிநிதி தெரிவித்ததால் கூட்டம் நாளைக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

மூவர் கமிஷன்

சிட்னி, அக். 20

இன்று இங்கு மூவர் மத்யஸ்த கமிஷன் கூட்டம் கூடியது.

இந்தோனேஷிய அந்நியநாட்டு மந்திரி

சிங்கப்பூர், அக். 20

அகில ஆசியா மகாநாட்டுக்கு விஜயம், சென்றமார்ச்சு மாதம் டில்லிக்குச் சென்ற இந்தோனேஷிய குடியரசின் அந்நிய நாட்டு மந்திரி ஹாஜி சாலிம் மத்திய கிழக்கு நாடுகளில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, இந்தோனேஷிய விவகாரம் பற்றி ஐக்கிய தேச பாதுகாப்பு கவுன்ஸல் கூட்டத்திற்கு நியூயார்க் சென்று இன்று சிங்கப்பூர் திரும்பி வந்தார்.

கொலன்னாவை துப்பாக்கிப் பிரயோக வழக்கு

ஜாமீன் தொகை ரூ. 1000 ஆக குறைக்கப்பட்டது

கொழும்பு, அக். 22

கொலன்னாவை துப்பாக்கிப் பிரயோக வழக்கில் சட்ட விரோதமாக கூட்டங்கூடி சார்ஜண்ட் ஏகநாயகாவை சுட்டுக் கொல்ல முயற்சித்ததாக ஒன்பது பேர்கள் மீது குற்றம் சாட்டிகொண்டு வரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பண்டிதகுணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஒரு எதிரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருவதாகவும் மேலும் ஒருமாத காலத்துக்கு அவர் வெளியே வரமுடியாதென்றும் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் எம். பக்கீர் என்பவரைவிட மேலும் நான்கு பேர் தங்கள் பிணைப்பணத்தைக் கட்டமுடியாது ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சார்பில் திரு பதுமநாதன் பேசுகையில் எதிரிகளின் ஜாமீன் தொகையை 1500 ல் இருந்து குறைக்க வேண்டுமென கோர்ட்டில் விண்ணப்பித்துக்கொண்டார். நீதிபதி எதிரிகளின் பிணையை ரூ. 1000 ஆக குறைத்து வழக்கு விசாரணையை நவம்பர் 24-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

முனிசிபல் கமிஷனர் கார் அலவன்ஸ்

கொழும்பு முனிசிபல் சபையின் கூட்டமொன்று நேற்று முன்தினம் டெபுடி மேயர் ஜனாப். எம். கனி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முனிசிபல் சபைக் கமிஷனர் அதிகார பூர்வமாக உத்தியோக தோரணையில் பெற்று வரும் கார் அலவன்ஸை அக்டோபர் 1-ம் தேதிமுதல் இல்லாமல் செய்யவேண்டுமென்று கொண்டுவரப்பட்ட தீர்மானம் பற்றி பலமான விவாதம் நடைபெற்றது. திரு. டி. சொய்ஸா அத்தீர்மானத்தை திருத்தி, அதிகாரிகள் உத்தியோக தோரணையில் பிரயாணம் செய்துள்ளமைல் கணக்கின்படி கார் அலவன்ஸ் கொடுக்கப்படவேண்டுமென தீர்மானங்கொண்டு வந்தார். இதனை நிதிக் கமிட்டி ஆலோசனைக்கு விடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக பாங்க் மீது ரஷியாகுற்றச்சாட்டு

யுத்தம் நடத்த ஹாலந்துக்கு பணஉதவி

லண்டன், அக். 19

உலக பாங்க், சர்வதேச நிதி இவைகளுடன் புனருத்தாரணத்திற்குப் பண உதவி செய்வது சம்பந்தமாக ஒப்பந்தம் செய்வது பற்றி ஐக்கிய தேச பொருளாதார சமுதாய கமிட்டியில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நிறைவேறியது. தீர்மானத்தை ரஷியப் பிரதிநிதி எதிர்த்துப் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:- உலக பாங்கும் சர்வதேச நிதி ஸ்தாபனமும் ஆதிக்கம் விரும்பும் அமெரிக்காவின் செல்வாக்கால் தூண்டப்பட்டுள்ளது. அரசியல்நோக்கங்களுக்கு அந்த ஸ்தாபனங்களிடமிருந்து கடன் வாங்கப்படுகிறது. அவை வால்வீதி அமெரிக்க பண முதலாளிகளின் ஏஜன்ஸிகளாக இருக்கின்றன. அவைகளின் கொள்கை அபாயகரமானது. அவை இந்தோனேஷிய குடியரசு மீது ஹாலந்து யுத்தம் நடத்த ஹாலந்துக்குப் பண உதவிசெய்திருக்கின்றன. இந்த இரு ஸ்தாபனங்களிலும் ரஷியாவுக்கு சம்பந்தமில்லை.

நாஜிகள்கொள்ளையிட்ட தங்கம்

பிரான்சுக்குப் பெரிய பங்கு

வாஷிங்டன், அக். 17

நேசதேசங்கள் கையிலிருக்கும் நாஜிகளால் கொள்ளையிடப்பட்ட தங்கச் சேமிப்பிலிருந்து 10 கோடி 41 லட்சத்து 50 ஆயிரம் டாலர்கள் பிரான்சுக்கு முத்தேசக் கமிஷனால் வழங்கப்பட்டுள்ளது. முதலாவது பங்கின் பெரும்பகுதி பிரான்சுக்கு இதன் மூலம் கொடுக்கப்பட்டுவிட்டது. டச்சு சர்க்காருக்கு 4 கோடி 3 லட்சத்து 76 ஆயிரம் டாலர் வழங்கப்பட்டது. ஆஸ்டிரியா, 4 லட்சத்து 60 ஆயிரம் டாலரும், இத்தாலி 4 கோடி 2 லட்சத்து 80 ஆயிரம் டாலரும் கோரியுள்ளன. இக் கோரிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டன.

பிரான்ஸின் ஒடிந்துவிழும் பொருளாதாரத்திற்குக் காயகல்பம் செய்யும் இம் முயற்சி முனிசிப்பல் தேர்தலுக்குச் சமீபத்தில் வந்தது கவனிக்கத்தக்கது. அமெரிக்காவுக்கு இம் முயற்சியில் முக்கிய பங்குண்டெனத் தெரிகிறது.

மிஞ்சிப் போயிருக்கும் அமெரிக்க கப்பல்கள்

ஹாரிமன் ஆலோசனை

வாஷிங்டன், அக் 19

'அந்நியக் கப்பல்கள் அமெரிக்க அயல் நாட்டு வர்த்தகத்தைச் செய்ய அனுமதிக்க வேண்டும்' என்று வர்த்தகக் காரியதரிசி திரு ஹாரிமன் இன்றிரவு இங்கு கூறினார். இதன் மூலம் அந்நாடுகள் அதிகரித்த டாலர்களைச் சம்பாதிக்க முடியும் என்றும் அவரால் கூறப்பட்டது.

தம்மிடம் மிஞ்சிப் போயிருக்கும் கப்பல்களை மற்ற நாடுகளுக்குக் கொடுத்தால் அவர்கள் தமது காலத்தைக் கப்பல் கட்டுவதில் ஈடுபடுத்தவேண்டியதில்லை. இதர புனருத்தாரண வேலைகளுக்குச் செலவிடாமல் என்றும் அவரால் கூறப்பட்டது. (ராய்ட்டர்)

28 ரூத்தல் தங்கப்பாளம்

பம்பாய்த் துறை முகத்தில் கண்டு பிடிக்கப்பட்டது

பம்பாய், அக். 18

பம்பாய்த் துறை முகத்தில் 28 ரூத்தல் எடையுள்ள மற்றோர் தங்கப் பாளம் கண்டு பிடிக்கப்பட்டது இதன் மதிப்பு ஒரு லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் எனத் தெரிகிறது.

1944 துறைமுக வெடி விபத்தின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட 17 வது தங்கப் பாளம் இதுவாகும். மற்றப் பதினாறும் சென்ற வருஷம் அக்டோபர், நவம்பர் மாதங்களில் கண்டு பிடிக்கப்பட்டது.

இன்னும் பல கண்டுபிடிக்கப்படலாம் எனச் சொல்லப்படுகிறது. (அ-பி)

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

அதிகரித்து வரும் அரசாங்கச் செலவு

வரவரக் குறையும் வருமானம்

எதிர்நோக்கி நிற்கிறது பொருளாதார நெருக்கடி

பொது மக்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தாது ஊதாரித்தனமாக செலவு செய்ய வேண்டாம்!

சென்ற வார "ஹெல திவ" என்னும் சிங்களப் பத்திரிகை எழுதிய ஆசிரியத் தலையங்கத்தின் தமிழாக்கம்:-

எதிர்பார்த்ததற்கு மேலாகவே 1945-46-ம் வருடத்தில அரசாங்கச் செலவு 1,55,81 374 ரூபாய்கள் அதிகரித்திருப்பதாக பொக்கிஷ இலாக்காவன் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது இந்த வருடச் செலவு இன்னும் அதிகரிக்குமென்று நிச்சயமாகவே எதிர்பார்க்கலாம். எங்கள் தேசிய வருமானம் வரவரக் குறைந்துகொண்டே வருகிறதென்பதும், செலவு வரவர அதிகரித்துக்கொண்டே போகிறதென்பதும் இரகசியமல்ல. சென்ற வருடத்தில் மாத்திரம் மேலதிகமான 39 மான்யங்களுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாக பொக்கிஷ இலாக்கா அறிக்கை கூறுகிறது.

இப்படியெல்லாம் தேசிய ஆதாயம் குறைந்துகொண்டும், செலவு அதிகரித்துக்கொண்டும் போவது சுபசகுனமல்ல; ஆனால் எதிர்காலத்தில் உண்டாகப்போகும் பொருளாதார மந்தத்திற்கும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும் துர் அறிகுறியேயாகும் இது. ஏழைப் பொது மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களின் விலை வரவர அதிகரித்துக்கொண்டே போகிறது. பண முடையோ கழுத்தை நெரித்துக்கொண்டே இருக்கிறது. மேலும் ஏழைகளிடம் பண நடமாட்டமோ பஞ்சாய்ப் பறந்துவிட்டது.

தேச மக்களை பயங்கரமான ஆபத்துகளுக்கு இலக்காக்கி இருக்கும் பொருளாதார மந்தத்தை-தொழில் துறையின் ஆட்டத்தை-வேலையில்லாத் திண்டாட்டத்தை- அன்றாட வாழ்க்கைத் தேவையின் பஞ்சத்தையும், சுகபோகத்தில் இருமாந்திருக்கும் திரு. சேனநாயக்காவின் யூ. என். பி. கபினெட் மந்திரிசபை ஆராய்ந்து பார்க்காமல், தம் விஷயத்தில் மாத்திரம் சுயநலமாய் நடந்துகொண்டது மன்னிக்கமுடியாத குற்றமாகும். அதுவும் தவீர இந்நிலைமை தேச மக்களின் துர்ப்பாக்கிய வாழ்க்கைக்கு அடிகோலுவதாகும்.

பார்லிமெண்ட் அங்கத்தவர்கள், மந்திரிகள், செனட்டர்கள் ஆகியவர்களின் சம்பளத்தை நிர்ணயித்து, கபினெட் மந்திரிசபையினர் அதை நிறைவேற்றியும்விட்டார்கள். இவர்களின் சம்பள நிர்ணயத்தைக் கூர்ந்து நோக்கும்போது ஒரு உண்மை புலப்படுகிறது. அதாவது, **அரசாங்கப் பொதுப்பணத்தை சம்பளத்தின் பேரில் தாங்கள் பகிர்ந்துகொள்ள முயற்சி செய்வதேயாகும்.** தேசம் சுபிட்சமாக இருந்த காலத்தில் தேசத்தை ஆட்சி புரிந்தவர்கள் அரசாங்க சபையினரே. அதில் அங்கத்தினர்களாயிருந்தவர்கள் ஐம்பது பேரே. இன்று, பார்லிமெண்டினால்தான் தேசம் ஆளப்படுகிறது; இதில் 101 பேர்களிருக்கிறார்கள். அதாவது அரசாங்க சபையைப் போன்று இரண்டு பங்கு அரசாங்க சபையில் 1500 ரூபாய் மாதச் சம்பளமாக 7 மந்திரிகள் இருந்தார்கள். இன்று 14 மந்திரிகள் இருக்கிறார்கள். உதவி மந்திரிகள் தற்போது 9 பேர் இருந்த போதிலும் இன்னும் 5 உதவி மந்திரிகளை நியமிக்க இடம் உண்டு. இந்த 14 மந்திரிகளுக்கும் நிரந்தரக் காரியதரிசியாய் இருக்கும் 14 சிவில் உத்தியோகஸ்தர்களுக்கு 14000க்கு குறையாத சம்பளம் கொடுக்கவேண்டியிருக்கிறது.

பிரதம மந்திரிக்கு மாதம் 1500 ரூபாயும் விருந்தினர்களை உபசரிக்க 1500 மாக 3000ம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மந்திரிகளுக்கு 1000 விருந்தினர்களை உபசரிக்க 500 உதவி மந்திரிக்கு 1000. தலைவருக்கு 1500. உப தலைவருக்கு 1000. பார்லிமெண்ட் அங்கத்தவருக்கு 700. செனட்டர்களுக்கு 400. இப்படியாக அவர்களின் சம்பளத்தை நிர்ணயித்து விட்டு, மற்றப்படி இவர்களுக்கு பிரயாணச் செலவு, தபால் தந்திச் செலவு, எழுதும் கடுதாசி பேனா - மைச் செலவு ஆகிய யாவும் பொதுப் பணத்திலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது. இத்துடன் விருந்தினர்களுடன் விநோத களியாட்டங்களில் காலத்தை சந்தோஷமாக கடத்துவதற்கு இரண்டாம் பேருக்குத் தெரியாமல் கறுவாக்காட்டில் இருக்கும் "ஸிராவஸ்தி" என்னும் மாளிகை விலைக்கு வாங்கப்பட்டிருக்கிறது. இந்த விபரங்களிலிருந்து தெரியக்கூடியதென்னவென்றால், என்ன பாடுபட்டும் சரி, பார்லிமெண்டுக்குள் நுழைந்து விட்டால் எவ்வளவு பாக்கியம் என்பதேயாகும்.

மேலும் மந்திரி, உதவி மந்திரிப் பதவியைப் பெற்று விட்டால் இன்னும் எவ்வளவு சௌபாக்கியம்? லட்சக்கணக்காக செலவழித்து பார்லிமெண்டுக்குள் நுழைய முயற்சிப்பதன் மர்மம் இப்போதாவது பொது மக்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். நம் நாடு சிறு தீவாயினும்பொன் விளையும் தேசமல்ல. ஆனபடியால், கவர்னர் முதல் சிவில் உத்தியோகஸ்தர்வரைக்கும், பிரதம மந்திரி முதல் செனட்டர்வரைக்கு உள்ள எல்லா உயர்தர பதவிகள் வகிப்போரின் சம்பள விகிதத்தையும் தேசத்தின் பொது நன்மையை முன்னிட்டு குறைத்துக் கொள்ள வேண்டியது உடனே அவசியம். அப்படியன்றேல், இங்கிலாந்திலிருந்து கிடைத்த போலி கபினெட் வெள்ளையானையினால் இத்தேசம் இன்னால்வெண்டாகி நாசமாய்ப் போய்விடும்.

ஏழை இலங்கைக்கு தாங்க முடியாத பாரத்தை சுமத்துவது பெரிய வோர் அநியாயமாகும். அரசாங்க நிர்வாகம் செய்யும் சிலருக்காக தேவையான மட்டும் பொதுப்பணத்தின் பெரும் பகுதியை சம்பளத்துக்காக ஒதுக்குவது இன்னும் பெரிய வோர் மன்னிக்கமுடியாத குற்றமாகும்; நியாயத்தை துச்சம் பண்ணுவதாகும். இத்தகைய நடவடிக்கைகளை தேசத்தின் பொது நன்மையை விரும்புபவர்கள் செய்வது அழகாகாது; பொது மக்கள் வரவேற்க மாட்டார்கள்.

தேசததின் நிலைமையை, பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை, அரசாங்க பொக்கிஷத்தின் உறுதியை, கபினெட் சபையினர் தமது சம்பளத்தை நிர்ணயிக்கும்போது நன்றாக அறிந்திருந்தும், கண் மூடித்தனமாக நடந்துகொண்டது வெட்கக்கேடே.

இப்படியெல்லாம் செய்துவிட்டு, தாங்கள் தேச மக்களை சுகபோக வாழ்க்கை நடத்த வழி காட்டும் தேசாபிமானிகளாகவும், கடவுளர்களாகவும் மார்பு தட்டிப் பேசுகிறார்கள். குரங்கு அப்பம் பகிர்ந்தது போல, அவசரமாக ஏடீரென்று கூடிய மந்திரி சபையினர் தம்முடைய சுக சௌகரியத்தை அனுசரித்து சம்பளத்தை வேண்டிய மட்டும் அதிகரித்துக் கொண்டதே.

ஏழை இலங்கை இந்தப் பாரத்தை எவ்வளவு நாள் தாங்கிக் கொள்ளும்? பொது மக்கள் தான் பார்த்துக்கொண்டிருப்பார்களா? பிரதம மந்திரி முதல் செனட்டர் வரையுமுள்ள எல்லோருடைய சம்பளத்தையும் உடனே குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் கண்டிப்பாகக் கூறுகிறோம்.

கொழும்புச் செய்திகள்:

பொக்கிஷ பணத்திற்கு பாதுகாப்பு

கொழும்பு, அக். 22

மாகாணப் பகுதிகளுக்கு பொக்கிஷ இலாகா பெருந்தொகை பணங்களை அனுப்புங் காலத்தில் போலிஸ் பாதுகாப்பு ஏற்படுத்தப்படுவது வழக்கம். அடிக்கடி இப்பணங்கள் களவு போவதை முன்னிட்டு இப்பொழுது போலிஸ் பந்தோபஸ்தை அதிகரிப்பிக்கும்படி பொக்கிஷ இலாகா அதிகாரிகளைக் கேட்டுள்ளது. இதற்கு தகுந்தபடி போலிஸ் பாதுகாப்பளிக்க ஆட்கள் போதியதில்லாதபட்சத்தில் விசேட பயிற்சிபெற்ற இளைஞர்கள் கொண்ட ஒரு பகுதியை இதற்கு உதவும்படி சிபார்சு செய்துள்ளது.

* * *

மாத்தளைக்கு ரயில் போகிறது

வத்துகாமம்-மாத்தளை ரயில் பாதையில் வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதங்கள் திருத்தியமைக்கப்பட்டுவிட்டதால் இப் பகுதியில் நேற்று முன் தினம் மீண்டும் வழமைபோல ரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது

* * *

சர்க்கார் ஏஜண்ட் உருவப் படத் திறப்பு

மேற்கு மாகாண சர்க்கார் ஏஜண்ட் திரு. வி. குமார சுவாமியின் உருவப் படமொன்றை கச்சேரியிலே நேற்று முன் தினம் மாலை திரு. டி. எஸ். சேனநாயக்கா திறந்துவைத்தார்.

* * *

இலங்கைக்கு 8000 தபால் பைகள்

லண்டனிலிருந்து பம்பாய் வழியாக கொழும்பு துறைமுகத்துக்கு நேற்று முன் தினம் பிற்பகலில் வந்து சேர்ந்த "ஸ்ட்ராதெடென்" என்னும்கப்பல் இலங்கையில் சுமார் 8000 மெயில் பேக்குகளையும் பார்சல்களையும் இறக்கியுள்ளது.

* * *

திரு. ரோத் சைல்ட்

கொழும்பு வந்த "ஸ்ட்ராதெடென்" கப்பலில் பிரபல குடும்பத்தைச்சேர்ந்த திரு. ரோத் சைல்ட் ஆஸ்திரேலியாவுக்குப் பிரயாணம் செய்கின்றார்.

* * *

அகில இலங்கை பௌத்த மாணவர்கள் காங்கிரஸ்

அகில இலங்கை பௌத்த மாணவர்கள் காங்கிரஸின் கூட்டத்தின் பின் நாளந்தா வித்தியாலய மண்டபத்தில் அகில இலங்கை பௌத்த மாணவர்கள் காங்கிரஸ மத்திய நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் மிஸ சுலன்கனீ டயஸ தலைமையில் நடைபெற்றபோது காங்கிரஸ நிர்வாக அங்கத்தினர் தெரியப்பட்டனர்.

* * *

தென் ஆஸ்திரேலிய கவர்னர்

தென் ஆஸதிரேலிய கவர்னர் லெப்டினன்ட் ஜெனரல் ஸர் வில்லெளபிநோரி நேற்று முன் தினம் கொழும்பு வந்து ஆஸதிரேலியா சென்ற "ஸ்ட்ராதெடென்" என்னும் கப்பலில் ஆஸதிரேலியா சென்றுள்ளார்.

* * *

யானைக்கால் வியாதியை தடுக்க நடவடிக்கை

கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் யானைக்கால் வியாதி ஆரம்பித்துப் பரவுவதாக வைத்திய சுகாதார இலாகாவுக்கு அறிக்கைகள் கிடைத்துள்ளதன்மேல் இந்நோயைப் பரவாது தடுக்க நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதார வைத்திய இலாகா ஆலோசனை செய்கின்றது. கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் யானைக்கால் வியாதி பரவுவதற்கான காரணங்களைப்பற்றி அறிய முயற்சிகள் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கொழும்பு நகரில் எடுக்கப்படும் நடவடிக்கைகளில் முனிசிபல் சபையையும் ஒத்துழைக்கும்படி கேட்கப்படுமென்று தெரிகிறது.

ஸிந்துவில் எண்ணெய்க்கிணறு

பர்மாஎண்ணெய்க் கம்பெனியின் திட்டம்

கராச்சி, அக். 18

ஸிந்துவில் உள்ள லக்ரா என்னும் இடத்தில் நிலத்தடியில் பெட்ரோல் கிடைக்கும் என எண்ணப்படுகிறது. எனவே பர்மா எண்ணைக் கம்பெனி ஒரு சோதனை எண்ணைக் கிணற்றை இங்கு தோண்ட தீர்மானித்துள்ளது. அநேகமாக அடுத்தவருஷ முற்பகுதியில் இது ஆரம்பிக்கலாம் எனத் தெரிகிறது.

இவ்வேலையை ஆரம்பிக்க வடமேற்கு ரயில் பாதையில் ஒரு சிறு ஸ்டேஷன், 12 மைல் நீளமாக ஸ்டேஷனில் இருந்து பாலைவனப்பூமியூடாய்ரோட்டு எண்ணைக் கிணறு தோண்டும் ஊழியர் தொழிலாளர் வசிக்க வீடுகள், இந்து நதியில் இருந்து குழாய் ஜலம் முதலியஏற்பாடு செய்யவேண்டும். பத்தாயிர அடி ஆழமுள்ளதாக இருக்கும் என எண்ணப்படும் பிரஸதாப கிணறு வெட்ட 2000 டன் யந்திரங்கள் தேவைப்படும். மொத்தம் 15 மாத கால இடைவிடா வேலை தேவைப் படலாம்.

செலவோ பல லட்சக்கணக்கான ரூபாய்கள் ஆகும். (அ-பிரஸ)

'நாடு கடத்தப்பட்ட ஸ்ரீமதி சரோஜினியின் சகோதரர்'

ரஷியப் பிரஜையாகி பிறகு இறந்தார்

இந்திய சர்க்கார் கூறும் விவரம்

புதுடில்லி. அக். 18

இந்திய சர்க்கார் அறிக்கை கூறுவதாவது:-

ஸ்ரீமதி சரோஜினி நாயுடுவின் சகோதரர் ஸ்ரீ விரேந்திர நாத சடோபாத்தியாயஎன்னவானார் என்பதைக் குறித்து இந்திய சர்க்கார் விசாரித்து வந்தது. அவர் நாடு கடத்தப்பட்டு சென்ற 40 வருஷங்களாக ஐரோப்பாவில் இருந்துவந்தார். கடைசியாக 1937ல் ரஷியாவில் இருந்தார். மாஸ்கோவிலுள்ள இந்திய ஸ்தானிக காரியாலயத்திலிருந்து இப்பொழுது கிடைத்திருக்கும் செய்தியிலிருந்து அவர் ரஷியப் பிரஜையானார் என்றும் 1941 டிசம்பர் 2-ம் தேதி மாரடைப்பால் இறந்துவிட்டார் என்றும் தெரிந்தது.

காலரா மருந்து

இந்தியாவின் சுயதேவை பூர்த்தி

புதுடில்லி, அக். 19

இந்தியாவில் உண்டாக்கப்படும் காலரா மருந்து இப்போதைய தேவைக்குப் போதுமானது என்று சுகாதார மந்திரி இன்று இங்கு குறிப்பிட்டார்.

சிறிது நாட்களின் முன் அமெரிக்க அரசாங்கத்திடம் காலரா மருந்து கோரி இந்திய சர்க்கார் விண்ணப்பித்தது. லட்சம் தடவைக்குப் போதிய மருந்து மட்டும் அனுப்ப முடியும் என்று அமெரிக்க சர்க்கார் பதில் அளித்தது. ஆனால் பதில் கிடைக்குமுன்னரே மேற்படி மருந்து உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டுவிட்டன. இதனால் இன்றைய தேவைக்கு வேண்டிய காலரா மருந்து இங்கேயே கிடைக்கும் என்றும் அமெரிக்க சர்க்காரின் பதிலுக்கு நன்றிதெரிவிக்க வேண்டும் எனவும் சர்க்கார் பிரதிநிதி ஒருவர் இங்கு கூறினார்.

ஈராக்கில் ஜனசங்கியை

பாக்தாத், அக். 19

ஈராக் சரித்திரத்திலேயே முதன் முதலாக இன்று ஜனத்தொகை கணக்கு எடுக்கப்பட்டது. நாட்டின் எல்லைகள் மூடப்பட்டு நாள்முழுதும் நாடெங்குமுள்ள ஜனங்கள் அதிகாலையிலிருந்து அந்தி வேளைவரை தத்தம் வீடுகளிலிருந்தனர். 24 மணிநேரத்திற்குள ஜனத் தொகைபற்றிய புள்ளி விபரம் தெரிந்து விடும். [ராய்ட்டர்]

கொலை புரிய முயற்சியா?

வழக்கு சுப்ரீம் கோர்ட் விசாரணைக்கு விடப்பட்டது

யாழ்ப்பாணம், அக். 20

காங்கேசன்துறையைச் சேர்ந்த தையிட்டி வாசிகளான முருகர் கந்தையா, சிதம்பரப் பிள்ளை இராசையா தம்பையா செல்லத்துரை, சுவாமிநாதர் சின்னப்பு, சிதம்பரப் பிள்ளை சின்னையா என்னும் கந்தையா, தம்பையா சுப்பிரமணியம் ஆகியவர்களும் வேறும் ஒருவரும் அதேயிடத்தைச் சேர்ந்த வைரவி கதிராமுஎன்பவரை கொலை புரியும் நோக்குடன் சட்ட விரோதமாகக் கூடியதாகவும் அவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு மல்லாகம் மாஜிஸ்ட்டிரேட் முன் விசாரணைக்கு எடுகக்பட்டது. விசாரணை முடிவில் இவ்வழக்கு யாழ்ப்பாணம் சுப்ரீம் கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்படவேண்டுமென்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

தீவுப்பகுதி பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டி

வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கப்பட்டது

ஊர்காவற்றுறை, அக். 18

ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் தீவுப்பகுதி ஆங்கிலபாடசாலைகளின் விளையாட்டுப் போட்டி, பகுதி வித்தியாதிகாரி திரு. முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டில் முதலாவதாக அர்ச். அந்தோனியார் கல்லூரியும் இரண்டாவதாக காரைநகர் இந்துக்கல்லூரியும் மூன்றாவதாக நயினாதீவு ஆங்கில பாடசாலையும் பரிசு பெற்றன. (ந-நி)

கிரவுன் தியேட்டர் லிங்கன்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 5-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி — புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் பால்கனிக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

ஈகிள் ஹவுஸ் உயர்தர தாதுசத்துகளுள்ள பானங்களுக்குஇணையற்றது

தாதுசத்துக்கள் நிறைந்த கீழ்க்கண்ட எமது குளிர் பானங்களைக் கையிருப்பு வைத்திருக்கும்படி உங்கள் வியாபாரிகளைத் தூண்டுங்கள்:—

ஓரஞ்ச் பார்லி
லெமன் பார்லி
வைன்டோ
வைனோ
வினோ
பலதரப்பட்ட குளிர் பானங்கள்
பழ இரசங்கள்
டீ ஸைடர்
சம்பேன் ஸைடர்
ஸ்பெஷல் ஸைடர்

தந்தி:- "ஈகிள் ஹவுஸ்" நிர். 41, பார்பர் வீதி,
போன்:- 2193 கொழும்பு.

ஏஜண்டுகள் இல்லாத பகுதிகளுக்கு ஏஜண்டுகள் தேவை.

லொசிஞ்சர், டொபி, ஐசிங் சுகர்
இம்மூன்றிலும் முதல்தரமானது வேண்டுமென்றால்
குயின் (ராணி) மார்க்கே
பார்த்து வாங்குங்கள்



குயின் (ராணி) கன்பெக்ஷன் கம்பெனி
297 & 307 ச் ஸ்டிரீட் (செட்டியார் தெரு)
கொழும்பு
Phone: 4511 Telegrams:- "CONFECTION"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதங்கள்

மன்னார் பிரதிநிதி

ஐயா,

எங்கள் பிரதிநிதியாகிய திரு. ஸ. சிற்றம்பலம் துரையவர்கள் இந்தவத்தமாக எங்களுடைய முகத்திற் கரிபூசுவாரென்று நாங்கள் கனவிலுமதிர்பார்க்கவில்லை! அவர் எங்களுடைய முகத்திற் பூசினாலும் பூசட்டும். அவருக்காக ஊனின்றி ஊருராய்த் திரிந்து பிரசாரஞ்செய்து பிரதிநிதிப்பதவியிலேற்றிவிட்ட திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் முகத்திலும் கரி தடவுகிறாரே. இது நீதிதானா? அவரால்முகத்தில் கரி தடவப்படுகிற அதே பொன்னம்பலம் இல்லாவிட்டால் இன்றைக்கு அவர் வீற்றிருக்கும் பதவி அவருக்குக் கிட்டியிருக்குமா? இதையவர் சிந்தித்தாரா? அல்லது சிந்தித்த பிறகுதான் இப்படிச் செய்கிறாரா? இது நேர்மையும் மேன்மையுமுள்ள ஒரு மனிதனின் செயலா?

எங்கள் துரையவர்கள் ஆங்கில தமிழ்த் தினசரிகளில் வரைந்திருந்த கடிதத்தை வாசித்ததும் என்தலை சுழன்றது. எனக்கே இப்படியென்றால் இரவு பகல் ஓயாது இவரின் வெற்றிக்காக உழைத்த திரு. பொன்னம்பலத்தின் மனம் என்னபாடுபடும்? பாவம்! அது அவருடைய அதிர்ஷ்டம். அவர் மன்னாருக்கென்று கொண்டு வருகிற ஸ்வாமிகளெல்லாம்அவருக்கு இப்படியா செய்யவேண்டும்.

அது ஒருபுறமிருக்க, "தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும், தமிழ்மக்களையும் தங்கள் இஷ்டப்படி ஆட்டி வைக்கத் தங்களுக்கு உரிமை இருப்பதாகச் சில காங்கிரஸ்காரர் எண்ணிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது"என்று கூறுகிறார் திரு சிற்றம்பலம் துரைகள். அன்று மன்னார் பகுதியிற் சில வோட்டுக்களைப் பெறுவதற்காக திரு. பொன்னம்பலத்தின் வாலைப் பிடித்துக் தொங்கித்திரிந்த அவரிப்போது 'குடியிருந்த வீட்டிற் கொள்ளி வைக்கும்'' ஆசாமியாய் மாறி யூ. என். பியின் வாலைப்பிடித்துத தொங்கிக் கொண்டிருக்கிறாரே? அந்த வால் அறுந்துவிட்டால் இவர் பாடு அதோ கதிதான். துரையவர்கள் மேற்கூறிய வாக்கை ஒரு நாளாவது மன்னாரிற் சொல்லி யிருந்திருப்பாரேயாகில்மன்னாரில் பொன்னம்பலத்தை ஆதரிப்பவரின் வோட்டுகளும் இவருக்கில்லை; இன்றைய மந்திரிப் பதவியும் இவருக்கில்லை.

இனனுஞ் சொல்கிறார் சிற்றம்பலம்! "ஆரம்பத்திலிருந்து இறுதிவரையில் நான் திரு. பொன்னம்பலத்தை ஆதரித்து வந்தது வருந்தத்தக்க விஷயமாகும். அவருக்கு நான் ஆதரவளியாதிருந்தால் என்னுடைய பிரசாரத்தை இன்னும் தீவிரமாக நடத்தியிருக்கலாம்" ஆஹா என்ன கபடமான யோசனை? இவர் மன்னார்த் தொகுதிக்கு அபேட்சகராய்ப் புறப்படும் போதே எவ்வளவு தந்திர யோசனையுடன் வந்திருக்கிறார். "ஆட்டுத்தோலைப் போர்த்த ஓநாய்" மாதிரி அடங்கியிருந்துவிட்டுச் சந்தர்ப்பம்கிடைத்ததும், இன்று காங்கிரஸின் கழுத்தைத் தானே கடிக்கப் பார்க்கிறார். இந்த அவகேடான யோசனையைத் திரு. பொன்னம்பலம் கண்டாரா? கண்டிருந்தால் இவரைக் கிட்ட நெருங்கவிட்டிருப்பாரா? இல்லை.

அன்று கடந்த புரட்டாதி மாதம் 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதாவது இவர் தமது வெற்றியடைந்த அன்று-காலை 11 மணியளவில் மன்னார் முற்றவெளியில் திரு. குமாரசாமி வலது புறமும், திரு பொன்னம்பலம் இடது புறமும் சாட்சிகளாய் நிற்க, "சேனநாயக்கா அதிகாரமமதை பிடித்தவரென்றும், யூ. என். பி. அவரால் ஆட்டப்படும் வாலென்றும், கடைசிவரை அதை எதிர்ப்பேன்" என்றும் கூறினார். அதிகாரவர்க்கத்தையும், அவர்கள் அட்டூழியத்தையும் அவ்வளவு கடுமையாகத் தாக்கிப் பேசிய இவர் இன்று ஏகாதிபத்தியத் திமிர்பிடித்த யூ. என். பி. கட்சியினருடன் கை கோர்த்து நடக்கிறாரே? இவர் இவ்வித கபட நாடகத்திற் கைதேர்ந்த மகான் என்பது யாருக்குத்தான் தெரியும்.

ஐயா! ஏதோ மன்னார் வாக்காளரதும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தினதும் அதிர்ஷ்டம் அவ்வளவுதான். எது எப்படி இருந்தாலும் திரு சிற்றம்பலம் துரையவர்கள் மீண்டும் மன்னார் தொகுதிக்கு அபேட்சகராய் வர விரும்பமாட்டாரென்பது எனது பலத்த நம்பிக்கை. அப்படித்தான் அவர் எனது நம்பிக்கையைத் தோற்கடித்து அபேட்சகராய் வந்தாலும் மன்னார் வாக்காளர்கள் முன்போல ஏமாந்தசோணகிரிகளாய்இருக்கமாட்டார்களென்பது எனது அபிப்பிராயம்.

அதுவுமன்றி துரையவர்கள் இவ்வித திடீர்வதந்திகளைப் பரப்பும்போது, மன்னார் வாக்காளரைப் புறநடையாக விட்டு மற்ற இலங்கையருக்குக் கூறட்டும்; அப்போதுதான் அவருடைய ஜம்பம்பலிக்கும். இனியும் அவருடைய பயறுகள் மன்னார் உலையில் அவிவது முயற்கொம்புதான்.

இங்ஙனம்,
மன்னார் தொகுதி வாக்காளன்,
"ஏமாந்தசோணகிரி"

மன்னார். 16-10-47

(2)

ஐயா,

யாழ்ப்பாணமக்கள் ஸ்ரீமான் ஜீ. ஜீ. பொன்னம்பலமவர்களை யாழ்ப்பாணப் பிரதிநிதியாய் தெரிவு செய்ததையிட்டு, மனமகிழ்வுறுகிறார்கள். தமக்குச் செய்த குறைகளையும், யாழ்ப்பாணமக்கட்கு மேற்கொண்டு செய்யப்போகும் பெரும் பாரதூரமான குற்றங்களையும், 18-10-47ல் வெளியான தினகரனில், திருவாளர் சிற்றம்பலமவர்கள் வெகு விரிவாய் வெளிப்படுத்தியிருந்தார்.

ஆகா! என்ன ஆனந்தம்! தமிழ் மக்கள் மேல் எத்துணை அன்பு! இத்துணை அன்பிற்கும் நாம் (தமிழ் மக்கள்) எவ்விதம் கைம்மாறு செய்யப்போகிறோம். தமிழ்மக்கள்மேல் இவ்வளவு அளவுகடந்த அன்பு கொண்டதனாலல்லவோ, தன்னையே மறந்தார். தமிழ் சமூகத்தையே மறந்தார்; பின் தமிழர் என்று ஓர் ஜாதியார் இலங்கையிலும் இருக்கிறார்கள் என்பதையும் மறந்தார், எம் தமிழ் மந்திரி.

ஆட்டைக் கடித்து, மாட்டைக்கடித்து, மனிதனையும் கடிக்க முற்பட்டாற்போல் என்ற பழமொழிக்கிணங்க, முதன் முதலில் இந்தியர்கள் வெளியேறவேண்டும், இந்தியர்களை வெளியேற்றவேண்டும் என்று கர்ஜித்தார்கள். இன்று அதே நாக்கு யாழ்ப்பாணத் தமிழர்களையும் பிறநாடுகளுக்குப் போகவேண்டியதுதான் என்று கூசாமல் கூறுகின்றது என்னே! காலக்கொடுமை, என்னே! தமிழனின் நிற்கதியான வாழ்வு. இத்துணை நிற்கதியான வாழ்விற்குக் காரணம்?

யூ. என். பி. என்னும் தலைப்பாகையை தலையிற் சூடி அதனுதவிகொண்டு மந்திரியென்னும் செங்கோலைக் கையிற்பிடித்த மாதம் ஒன்றிற்கு 1500 ரூபாய்களை மான்யமாய்பெறும் எம் தமிழ் பிரபுக்களே தாங்கள் யூ. என். பியிற் சேர்ந்து தமிழ் மக்களைத் தலை குனிய வைத்தது போதாதென்று தமிழ் காங்கிரசை வகுப்புவாதக் கட்சியென்றும், அதன் தலைவரை வகுப்புவாதியென்றும், அறைகூவி யழைக்கிறார்கள். யூ. என். பி. யில் வகுப்பு வாதம் இல்லையாம் தமிழர், முஸ்லீம், சிங்களவர், பறங்கியர் எல்லோரும் பேதமின்றி இருக்கிறார்களாம். எத்துணை மறை நகமான ஒழுக்கம் சிந்தித்துப்பாருங்கள். கடந்த 14-10-47ல் நிகழ்ந்திய (ஸபீக்கர்) தேர்தலில் எம் தமிழர்களைக்கொண்டே, தமிழ் வர்க்கத்தினரின் முகத்தில் கரிபூசுவித்தார்கள் ஏன்? அவ்விடத்தில் இத்தனை சிங்களப் பிரமுகர்கள் இருந்தும் ஒருவராவது எழுந்து பிரேரணை கொண்டு வராததிற்குக் காரணம் என்ன?

நன்றாகத் தெரியும். தமிழனைக் கொண்டே தமிழர்களின் மானத்தைக் கெடுக்கவேண்டும் என்ற ஆதையே அப்படிச் செய்தது. அவர்களது ஆசையை நிறைவேற்ற சற்றேனும் தயங்காத எம் தமிழ் மன்னர்கள், மானத்தை மண்ணாக மதித்த மதியூகிகள், மாபெருந் தியாகங்கள் செய்கிறார்கள். செய்நன்றி மறவா நற்குணமுடையவர்கள் தாங்கள் பெற்ற மந்திரிப் பதவிக்கு பிரதியுபகாரம் செய்யாமல் இருக்க முடியுமா?

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை''

"ஆடு நனையுதென்று ஓநாய் அழுததாம்" அவ்வாறே யாழ்ப்பாண மக்கள் ஜீ ஜீ யை தேர்ந்தெடுத்ததையிட்டு விசனிக்கிறேன் என்று திரு. சிற்றம்பலம் கூறியுள்ளார். அத்துடன் படிப்பறிவற்ற நிர்மூடர்களுக்கு ஓர் படிப்பினை விடுத்திருந்தார். எவராவது ஒருவர் தமிழ் காங்கிரசை ஆதரிக்க முன்வந்தால் அவன் அதே சமயத்தில் தன் சுதந்திரத்தைப் பறிகொடுக்கவும், அடிக்கொரு நினைவுள்ள இந்த வகுப்புவாத ஸ்தாபனத்தின் சொற்படி பணிந்து நடக்கவும் தயாராய் இருக்கவேண்டும் என்பதே அடிக்கொரு நினைவுள்ள வகுப்புவாதக் கட்சியென்று வெகு பிரமாதமாய் கூறியிருக்கிறார் திரு வாளர் சிற்றம்பலம்.

1, தன் சொந்தப் பொருளை அடிமைத் தளையின் முன்னின்று கேளாமல் அதிகாரத்தோடுகேட்பவன் வகுப்புவாதி

2, தமிழனுக்கும் இங்கு உரிமையுண்டு என்று அஞ்சாமல் வாதாடுபவன் வகுப்புவாதி

3. தமிழன் என்று தலைநிமிர்ந்து ஜனசமூகத்திடையே நடமாட வழிகாட்டுபவன் வகுப்புவாதி.

4, தமிழனுக்கு சமபல அந்தஸது கோருபவன் வகுப்புவாதி. அவனால் நடாத்தப்படும் காங்கிரஸ கட்சி ஓர் வகுப்புவாதக் கட்சி. எத்துணை விசித்திரமான நினைவு. அஞ்சிப்பயந்து அடிமையாய் போனதால்லவா, அனுராதபுரம் வரை எல்லையாகக்கொண்ட யாழ்நகர் மக்கள் அன்று அடங்கி ஒடுங்கி ஆனையிறவுக்கப்பால் பயத்துடனும் நடுக்கத்துடனும் இருக்கிறார்கள். இன்று ஒவ்வொரு சிங்களப் பத்திரிகைகளில் கூறப்படும் ஒவ்வொரு கடும் வகுப்புவாத வார்த்தைகளும் உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழ்மக்களின் உயிர் நிலையங்களை ஆயிரம் வள்கள் கொண்டறுப்பது போல லவா இருக்கின்றது.

அடிமை என்றால் என்ன? யார் யாருக்கு அடிமை? தமிழன் தமிழனுக்கா அடிமை? அன்றி தந்தைக்கு மைந்தன் அடிமையா? அன்றேல் தாய்க்கு மகள் அடிமையா? இல்லையில்லை ஒருநாளுமில்லை மனிதனுக்கு மனிதன் எப்படி அடிமையாய் இருக்கமுடியும்? அடிமை என்ற பூட்டை உடைத்து, மெருமைகொண்டு தனித்து நிற்க வழியின்றி கானல் நீரைக் கண்ட மான்போல் கதிகெட்டு மானமிழந்து யூ என். பி என்னும் பாசக்கயிற்றால் கழுத்தில் சுருக்கிட்டு நிரந்தர அடிமையாய் சேனநாயக்காவின் பக்தனாய் அவர் திருமலரடியை நமஸகரித்து காலாவிட்ட வேலையை சிரமேற்கொண்டு சேவிக்கக் காத்துக் கிடப்பவர்ஃள் சுதந்திர புருடர்கள் போலும்! தன் தாய், தன் தந்தை, பந்துமித்திரர், உற்றார், உறவினர், வாழ மனம் பொறாமானங்கெட்ட மனிதர்கள் பிறன் வாழ்வில் எப்படி மனம் கொண்டுள்ளார்கள்? அதற்குத்தானே மந்திரி பதவி இவர்கள் என்றும் யூ. என், பி,யின் அடிமைகள் என்பதை யாராலும் மறக்கவும் முடியாது மறுக்கவும் முடியாது,

தமிழர்! ஏன் இன்னும் உறக்கம்! உறங்கியகாலம் போதாதா? உறக்கத்திலிருக்கும் ஒவ்வொரு தமிழனையும் தட்டியெழுப்பவேண்டியது உன்கடமை உண்மை உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழனும் விழித்திருக்கவேண்டியதவசியம்.

தூக்கம் துக்கத்தை யாற்றும் என்றுஎண்ணி தூங்கிவிடாதே!

இப்படிக்கு,
20-11-47. உண்மை விளம்பி.

(3)

மன்னார் நகர் சகோதர சகோதரிகளே! நாங்கள் சும்மாயிருக்க இது தருணமல்ல.

திரு சிற்றம்பலம் மன்னார் நகருக்கு அபேட்சகராய் வருமூன் சிவியா தெருவில் (யாழ்ப்பாணம்) நடந்த கூட்டத்தில் திரு. சிற்றம்பலம் தான் தமிழ்க் காங்கிரஸ் அனுதாபி என்றும், மன்னாரில் யூ. என். பி. அபேட்சகர் திரு. தியாகராஜாவுடன் போட்டி போடப் போவதாகவும் சொன்னார். அதிலிருந்து நாம் திரு. சிற்றம்பலம் யூ. என். பி. யுடன் சேரமாட்டாரென்றும், தமிழ்க் காங்கிரஸை ஆதரிப்பார் என்றும் நம்பினோம். அவரை ஆதரித்தோம். அவர் வெற்றியடைந்ததும் பதவிக்காக யூ என். பியுடன்சேர்ந்தார். அதன் பின்பும் தான் சுயேச்சையென்றார். அதையும் சிலர் நம்பினார்கள். ஆனால் 14-ம் தேதி நடந்த ஸ்பீக்கர் தேர்தலில் யூ. என். பி. ஆளாகிய திரு. மொலமுரேயின் பெயரைப் பிரரேபித்தார்.

இப்போது அவர் சுயேச்சையென்று சொல்லி யாரையும் ஏமாற்ற முடியாது. அதை மறைக்கும் பொருட்டு இப்போது காங்கிரஸையும் திரு. பொன்னம்பலத்தையும் குறை கூறுகிறார்.

இனியும் இந்தப் பசப்பலுக்கு இடங் கொடாதீர்கள். மன்னார் நகர் மக்கள் வீரர்கள், எங்கள் உரிமையை வீரத்துடன் பெற வேண்டுமே ஒழிய, பந்தம் பிடித்து பெறவேண்டியதில்லை. இதை சென்ற தேர்தலின் போதும் காட்டியிருக்கிறோம். பந்தம்பிடித்து எங்களுக்கு உதவி செய்த அபேட்சகரைத் தோற்கடித்துவிட்டோம். இனியாகுதல் உணமை வீரர்களைத் தெரிந்து அனுப்புவோம். தமிழராகிய நாம் ஒரு போதும் பந்தம்பிடித்து வாழமாட்டோம்.

இப்படிக்கு,
எஸ். தம்பிராசா.

சின்னச்கடை,
மன்னார். 20-10-47

கைது செய்யப்பட்டவரை விடுவிக்க முயற்சி

போலிஸ் காவலறை மீது கல் வீச்சு

கொழும்பு, அக். 22

கொதாதுவா போலிஸ காவல் அறை மீது கற்களை எறிந்து அங்கு கைது செய்து வைக்கப்பட்டிருந்த ஹென்ட்ரிக் பெரேரா என்பவரை விடும்படி கான்ஸ்டபிள் சில்வாவை பயமுறுத்தியதாகவும், சட்டவிரோதமாகக் கூடி கலகம் விளைத்ததாகவும் எல். எல் லூவிஸ் பெரேரா, டபிள்யூ. தர்மதாஸா ஏ. ஏ. மாட்டின் பிரேரா, பி. எம். பெரேரா, கே எஸ் பெரேரா, ஏ. ஏ. சைமன் பிரேரா, பி. பொடிசிங்கோ, எச். சைமன் கல்தேரா, எல். சோமசிரி பொத்தேஜு ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பிரெட் ஈ. அல்லெஸ் முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது கான்ஸ்டபிள் சில்வாவின் சாட்சியத்தின் பின் விசாரணையை நவம்பர் 5-ம் தேதிக்கு மாஜிஸ்டிரேட் ஒத்தி வைத்தார்.

ஜாஎல அர்பன் சபைக்கூட்டம்

ஜா-எல அக். 21

ஜாஎல அர்பன் சபை இருமுறை அதன் மாதாந்தக் கூட்டத்தை ஒத்திவைத்திருந்தது சனிக்கிழமை இந்த சபையின் கூட்டம் தலைவர் திரு. வால்டர் பி. குணத்திலகா தலைமையில் நடைபெற்றது. வேவலா ரஸதா விஸதரிப்புக்கு எடுக்கப்பட்ட காணிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 6000 வீதம் நஷ்டஈடும், தென்னை மரங்களுக்கு ரூ. 10 வீதம் நஷ்டஈடும் கொடுப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

பட்டப்பகலில் ஸ்டோரில் ரப்பர் திருட்டு

கைது செய்யப்பட்ட நால்வருக்கு ரிமாண்டு

கொழும்பு, அக். 22

கம்பனித்தெரு மெஸர்ஸ் கில் அன் வால்டாக் கம்பெனியில் இருந்து ரூ. 1700 மதிப்புள்ள சுமார் 1900 ரூத்தல் ரப்பரைத் திருடியது சமபந்தமாக கைது செய்யப்பட்ட ஏ. ஹிச்சை அப்பு, பி. டேயானிஸ, எம். தோலிஸ சில்வா, பி சமரசிங்கா ஆகிய நால்வரும் 27-ந் தேதி வரை ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். இத்திருட்டு ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 8 மணிக்கு நடந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தியாவிலுள்ள பிரிட்டிஷாருக்கு காந்திஜி எச்சரிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிய வர்த்தக ஸதாபனங்களில் இந்தியருக்கு வேலை கொடுக்கலாகாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த இயக்கத்தில் சர்க்காருக்கு சம்பந்தமில்லாததுபோல வெளிப்படையாகத் தோன்றினாலும், இந்த இயக்கத்திற்கு தென்னாப்பிரிக்க பார்லிமெண்டிலுள்ள இரு கட்சி அங்கத்தினர்களும் மும்முரமாக ஆதரவளித்து வருகிறார்கள்.

ஜனமாற்றம்

புதுடில்லி, அக். 20

இந்திய சர்க்கார் அகதிகள் மந்திரி நியோகி பின்வருமாறு தெரிவித்தார்:- இன்னும் ஆறு வாரங்களுக்குள் பாக்கிஸ்தானைச் சேர்ந்த மேற்குப்பஞ்சாப் மாகாணத்திலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலுமுள்ள எல்லா ஹிந்து சீக்கிய அகதிகளையும் இந்தியாவுக்கும் இந்தியாவைச் சேர்ந்த கிழக்கு பஞ்சாப்பிலுள்ள எல்லா முஸலிம் அகதிகளும் பாக்கிஸதானுக்கும் மாற்றப்பட்டு விடுவர். பாக்கிஸதானிலிருந்து 25 லட்சம் அகதிகளை இந்தியாவுக்குக் மாற்றியாகிவிட்டது. இந்தியாவிலுள்ள 25 லட்சம் அகதிகள் பாக்கிஸதானுக்கு மாற்றப்பட்டாகி விட்டது. இன்னும் 18 லட்சம் முஸலிம் அகதிகளும் 23 லட்சம் ஹந்து சீக்கிய அகதிகளும் மாற்றப்பட விருக்கிறார்கள்.

காஷ்மீர் நிலைமை

கராச்சி, அக். 21

பாக்கிஸதான் சர்க்கார் விளம்பர அதிகாரி தெரிவிப்பதாவது:- காஷ்மீர் - மேற்குப் பஞ்சாப் எல்லையில் ஜம்மு - சியால்கோர்ட் ரஸதாவில் காஷ்மீர் துருப்புகள் 5 முஸலிம் அகதிகளைக் கொன்று விட்டதால் எல்லையின் சுற்றுப் புறங்களிலுமுள்ள பிரதேசங்களில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. அநேக கிராமங்களிலிருந்து ஜனங்கள் வெளியேறுகிறார்கள்.

கிருஷ்ண மேனன் லண்டன் திரும்பினார்

லண்டன், அக். 20

பிரிட்டனிலுள்ள இந்திய ஹை கமிஷனர் திரு. வி. கே கிருஷ்ண மேனனை பாரிஸில் இன்று பிரஞ்சு பிரதம மந்திரி ராமடீர் வரவேற்றுப் பேசினார். சனிக்கிழமை திரு. மேனன் பிரஞ்சு அந்நிய நாட்டு மந்திரி பிடால்டை சந்தித்துப் பேசினார். வெள்ளிக்கிழமை பாரிசுக்குப்புறப்பட்டுச் சென்ற திரு. மேனன் இன்றிரவு லண்டன் திரும்பினார்.

இந்தியாவில் பிரஞ்சு ஸ்தானிகர்

பாரிஸ, அக். 20

இந்தியாவில் திரு. டானியல் லெவி பிரஞ்சு ஸதானிகராக நியமிக்கப்பட்டிருப்பதை இந்திய சர்க்கார் அங்கீகரித்தனர்.

திரு. டானியல் லெவி 1935-வது வருடமுதல் 1940 வரை பின்லந்தில் பிரஞ்சு ஸதானிகராக இருந்தார். அவருக்கு வயது 56. சைனாவிலும் மாஸகோவிலுமுள்ள பிரஞ்சு ஸதானிகத்திலும் இருந்திருக்கிறார்.

பாதுகாப்பு கவுன்ஸிலும் இந்தியாவும்

நியூயார்க், அக் 21

நேற்று பாதுகாப்பு கவுன்ஸிலின் ஒரு ஸதானத்திற்கு நடைபெற்ற தேர்தலிலும் இந்தியாவுக்கோ அல்லது உக்ரைனுக்கோ போதிய அளவில் வாக்குகள் கிடைக்கவில்லை. மீண்டுமோர் தடவை அசெம்பிளி கூட்டம் முடிந்த பிறகு நடைபெறுமென்று தெரிகிறது.

லார்டு சின்ஹா இந்தியா பயணம்

லண்டன், அக். 20

லார்டு சின்ஹாவும்அவர்மனைவியாரும் இந்தியாவுக்குப் பயணமானார்கள். அவர்கள் இந்தியாவில் ஒரு வருடம் தங்கியிருப்பார்கள். லார்டு சின்ஹா கல்கத்தாவிலிருந்து வகுப்புசமரசத்திற்கு பாடுபடுவார். இந்தியா சுதந்திரமடைந்து விட்டதால் இனி தான் இந்தியாவின் பிரதிநிதியாக லார்டு சபையிலிருக்க வேண்டிய அவசிய மில்லையென்றும் ஆனால் நான் திரும்பி வந்தபின் குடியேற்ற நாடுகள் சம்பந்தமாக லார்டு சபையில் விவாதம் நடைபெறும் போது தான் லார்டு சபையில் இருப்பார் என்றும் லார்டு சின்ஹா தெரிவித்தார்.

தமிழர் மானத்தைக் காத்து தமிழர் பலத்தைக் காட்டுவது தமிழ்க் காங்கிரஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யுள் பிச்சை கேட்பதுபோன்று கேட்டுப்போவது உங்கட்கு தமிழர்களுக்கு அழகா? அல்லது கௌரவமா? இன்று தமிழருக்கு மதிப்பு இருக்கிறது என்றால் எதனால என்று உங்கள் மனமே சாட்சி சொல்லும் தமிழ்க் காங்கிரஸ இன்று உங்கள் விலையையும் மதிப்பையும் கூட்டியிருக்கிறது. ஆனால் இந்தக் காங்கிரஸ பதவிக்காக சேனநாயக்காவின் காலைக் கட்டிப் பிடிக்கவுமில்லை, அல்லது பந்தம் பிடிக்கவுமில்லை காவடி எடுக்கவுமில்லை. பூப்பிரதட்சணம் செய்யவுமில்லை. தன் பண்டையவும் இன்றையவும் மரியாதையையும் மானத்தையும் காப்பாற்றி நியாயத்தின் வழியில் நிற்கிறது. இதைவிட இன்று தமிழ்க் காங்கிரஸ பிரதிநிதிகளும் இ. இ. கா. பிரதிநிதிகள் எழுவருமாகப் பதினொரு பேர்கள் இடதுசாரிகளான நியாயம் படைத்த சிங்களச் சகோதரருடன் சேர்ந்து இடதுசாரிக் கட்சியுடன் நின்று தம் உரிமைக்காகப்போராடுவார்கள். இன்று தமிழ்க் காங்கிரஸ் என்ற கூட்டத்தார் இல்லாவிடில் தமிழர் தம் பலத்தையும் உரிமையையும் காட்ட முடியாது. சிங்கத்தினால் பிரிக்கப்பட்ட எருது போல நிற்கவேண்டி வரும் இன்னும் தமிழ்க் காங்கிரஸ சார்பாக நில்லாத தமிழர்கள் தமிழன்என்று சொல்வதையே வெடகமெனும் கொள்கையுடையவரென்றே சொல்லிவிடலாம். இப்படியான தமிழர்கள் பிரிந்து நின்றதால் இரு தமிழர் சேனநாயக்காவின் மந்திரி சபைக்காக விலைக்கு வாங்கப்பட்ட விலைமாந்தராகினர். இன்று எல்லாத் தமிழர்களும் ஒன்றுசேர்ந்து ஒரேமுகமாய் நின்றிருந்தால் தமிழனுக்குஇன்னும் மதிப்பும் விலையும் கூடியிருக்கும். சேனநாயக்கா தமிழரிடம் காவடியும் எடுத்திருப்பார். அதையெல்லாம் கெடுத்தார்கள் பதவி வேட்டைகாரத் தமிழர்கள்.

'உங்கள் பிரதிநிதி என்னுடைய மாணவன். உங்களுடைய பிரதிநிதி என்னுடைய மாணவன் என்பதை உங்கட்குக் கூறி உங்களுடன் நானும் சந்தோஷமடைகிறேன். இன்னும் சனத் தொகையில் வடமாகாணத்தின் ஒரு தேர்தல் தொகுதியினுள் இருப்போரிலும் குறைந்த தொகையை உடையதாயிருந்தும் இங்கு இனுந்தம் 700 'சுதந்திரன்' பத்திரிகை விற்பனையாகுவதைக் கேட்டுப் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் திரிகோணமலையினர் த. கா. சுக்கு முதல் வெற்றி ஈட்டிக்கொடுத்ததற்கும் இன்று நீங்களே கீழ் மாகாணத்தாருக்கு வழிகாட்டியாகவும் எடுத்துக்காட்டாகவும் விளங்குகிறீர்களென்பதையும் கண்டு அறிந்து பெருமிதமும் மகிழ்ச்சியுமடைகிறேன். திரிகோணமலைக்குவேண்டி முன்னேற்ற வேலைகளைச் செய்யவே முன்வந்திருக்கின்றோம். டாக்டர் இ. எம். வி. நாகநாதன் அவர்கள் கூறியதாவது:-இந்தியாவே உலகத்தில் பெரிய ஒரு தேசமும் குடிசனமும் கூடிய இடமாகும. அதை அரசாட்சிசெய்ய ஏழு மந்திரிமார்தானுண்டு. ஆனால் இவ்வளவு சிறிய இலங்கையை அரசாள 28 மந்திரிமார் சுதந்திரம் பெற்ற இந்தியாவுக்குத்தானுமில்லை இத்தனை மந்திரிமார் இலங்கைக்கு இது அநாவசியம். ஏழைகளின் பணத்தையும் அவர்களின் சீவியத்தையும் நாசம் செய்யும் அரசாட்சி முறையே சோல்பரி அரசாட்சி முறையாகும். நூற்றுக் கணக்கான அங்கத்தவர்களும் டசின் கணக்கான மந்திரிமாரும் பெரும் சம்பளமே இலங்கையை முன்னேற்ற உதவும். ஏழைகளின் ரத்தத்தை இன்னும் உறிஞ்சிக் குடிக்க சேனநாயக்கா பரிவாரங்களும் பந்தம்பிடிப்போரும் எத்தனித்துக் கச்சைக் கட்டி நிற்கும் காட்சியைக் கண்டு யார்தான் பொறுப்பார்கள்! தமிழனே! இந்நாட்டின் முதுகெலும்புஎன்றதைச் சேனநாயகாவும் அவர்கட்சியும் மனதில் பதித்துக்கொள்ளவேண்டும்!

த. கா. த. திரு. ஜீ. ஜீ பொன்னம்பலம் கூறியதாவது:

"வைத்தியர்மார் என்னை மூன்று வாரம்வரை பேசக் கூடாதென்றாலும் உங்கள் மகிழ்ச்சிகரமான வரவேற்பைக் கண்ட என்னால் பேசாமலிருக்க முடியவில்லை. தலைவர் மாணிக்கராஜாவின் தந்தையார் முதலாவதாய் திரிகோணமலைத் தமிழன் என்ற ஹோதாவில் சட்ட நிருபண சபையில் நின்றார். இன்று உங்கள் நாட்டு மகன் சிவபாலன் உங்களுக்காய்த் தமிழ் காங்கிரஸ சார்பாகப் பிரதிநிதியாய் வந்தார். உலகிலேயே ஒரு பெரும் துறைமுகமாய் விளங்கும் திரிகோணமலையில் ஆவணி மாதம் 23-ம் தேதி த. கா. வெற்றிக் கொடி நாட்டியது எங்கட்கு மிகவும் சந்தோஷமும் வரவேற்கக் கூடிய விஷயமுமாகும்

அன்றுதான் தமிழர் உரிமைக்கு அத்திவாரமிட்ட நாள். இதைவிட யூ. என். பி. என்ற கட்சி சார்பாக எந்தத் தமிழன் சென்றானோ அங்கெல்லாம அவன் தோற்கடிக்கப்பட்டான். இதனால் விளங்குவதென்ன? யூ. என். பியைத் தமிழர்கள் ஆதரிக்கவுமில்லை; அக் கட்சியிடம் அவர்கட்கு நம்பிக்கையுமில்லை என்பதாம் 1945-ம் ஆண்டில் தமிழ்ச் சாதி சார்பாக நான் இங்கிலாந்துக்குச் சென்றபோது சதி செய்தவர்கட்கு தமிழர்கள் படிப்பித்த பாடத்தினால் நாம் விளங்குவதென்ன? அதைவிட சில பதவி மோகங் கொண்ட தமிழ்ப் பிரதிநிதிகள் மக்களை ஏமாற்றிவிட்டார்கள். இனிமேல் இப்படி மக்களை ஏமாற்று வித்தை காட்டி அனுப்புவோருக்கு அடுத்த முறை சரியான பாடம் கற்பிக்கத் தமிழர் ஆயத்தமாயிருக்க வேண்டும. ஒரு கட்சியுமற்றவர் என்ற பெயரை வைத்துக் கொண்டு உங்கள் வாக்குச் சீட்டைப் பெற்று உங்கட்கு மாறாய் சுயாதீனக் கட்சி என்று பேரிட்டு சேனநாயக்காவின் காலைப் பிடித்தவர்களை நீங்கள் தமிழர் என்று சொல்வீர்களா? இக் கட்சியாரை நிர்வாணக் கட்சியார் என்றே கூறவேண்டும். இவர்கள்தான் சேனநாயக்காவைத் தமிழனுடைய தோள் மேலேறிச் செவி கடிக்கவிட்டவர்களாகும். ஆசிய நாடெல்லாம் சுதந்திரம் வேண்டி நிற்க இந்தோனேஷியச் சுதந்திர வீரருக்கு இந்தியா போன்ற நாடுகள் உதவிசெய்யுமுகமாக டச்சுக் கப்பலும் ஆகாய விமானங்களும் இந்தியாவினுள் வரக் கூடாதென்று ஜவஹர்லால் போன்றோர் எச்சரித்தபோது சேனநாயக்கா டச்சுக்காரருக்கு ஆகாய விமானத் தளமும் கப்பற தளமும் கொடுத்துதவியதை ஆசிய நாடுகள் நன்கறியும். இப்படிப்பட்ட சேனநாயக்காவின் மந்திரி சபையில் இடம் பெற நாங்களும் மற்றவர்களும் ஒருகாலும் விரும்போம். இலங்கையில் உள்ளோர் எல்லோரும் இட்ட மொத்த வாக்குச் சீட்டுகளில் நூற்றுக்கு 40 வீதமே யூ என். பிக்குக் கிடைத்தது. இதனால் விளங்குவது என்ன? பொது ஜனங்களின் ஆதரவு யூ. என். பிக்குக் கிடைக்கவில்லை என்பதே. ஆதலால் பொது ஜனங்களின் விருப்பத்தை அதிகம் பெற்ற மற்றக் கட்சிகளிடமேயே அரசாங்கம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

திரு சிவபாலன் அவர்களும் மற்றும் பலரும் பேசினார்கள்.

(ச-நி)

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 22உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

ஒரியண்டல் கவர்ன்மெண்ட் செக்யூரிட்டிஸ்ப் அஷ்யூரன்ஸ் கார்பெனி லிமிடெட்

மானிப்பாயைச் சேர்ந்த சங்குவேலியில் வசிக்கும் திரு. சுப்பையா திருஞானசம்பந்தர் அவர்களின் விமாக்கம்பெனி பொலிஸி இலக்கம் 360036-460236 தவறினதை சில நாட்களுக்கு